Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

English Academy
210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
Email: thangan 672002 @ yahoo.com
T.P. - 021-2222588
210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். பிரதான வீதி, சித்தன்கேணி.
Enrol your Children for Better results
சிறந்த பெறுபேற்றுக்கு உங்கள் பிள்ளைகளை சேருங்கள்
(சி-474)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 தை 22 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 துல்ஹிஜ்ஜா 03 (05.02.2003) புதன்கிழமை இதழ் :126



யாழ்.பல்கலைக்கழக கொடிக்கம்பத்தில் கறுப்புக்கொடி

# நெடுந்தீவு மக்கள் போராட்டம் நேற்றுடன் முடிவுக்கு வந்தது!

## நான்கு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன

(நெடுந்தீவு நிருபர்)

**நெடுந்தீவிலிருந்து ஈ.பி.டி.பி.யினரை வெளியேறக் கோரி, நெடுந்தீவு மக்கள் கடந்த 81 நாட்களாக நடாத்திவந்த சுழற்சிமுறை உண்ணாவிரதப் போராட்டம் நான்கு கோரிக்கைகளின் அடிப்படையில் நேற்றுடன் முடிவுக்கு வந்தது.**

நேற்றுக்காலை நெடுந்தீவுக்கு விஜயம் செய்த, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அப்பாத்துரை விநாயகமூர்த்தி மற்றும் சீ.வி.கே.சிவஞானம் ஆகியோர், போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மக்களுடனும், நெடுந்தீவுப் பொலிஸாருடனும் நடாத்திய கலந்துரையாடலை அடுத்தே, போராட்டம் நேற்று நண்பகல் 12 மணியளவில் இடைநிறுத்தப்பட்டது.

நெடுந்தீவு மக்கள் நடாத்திவந்த சுழற்சி முறையிலான உண்ணாவிரதத்தை இடைநிறுத்தி வைக்கச் சம்மதம் தெரிவித்த நெடுந்தீவு மக்கள் ஒன்றியப் பிரதிநிதிகள், பின்வரும் நான்கு கோரிக்கைகளை சமர்ப்பித்தனர்.

அக்கோரிக்கைகளாவன -(10 ஆம் பக்கம் பார்க்க)



நெடுந்தீவில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடல்

# கறுப்புக்கொடிகள், சோககீதம் என மக்கள் துக்க தினம் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் சுதந்திர தினத்தையொட்டி நேற்றைய தினம் வட- கிழக்குப் பகுதிகளில் கறுப்பு நாள் அனுஷ்டிக்கப்பட்டது.

நேற்று வட- கிழக்கின் அனைத்துப் பகுதிகளிலும் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டும் வாகனங்கள், பொது இடங்கள், கல்விச்சாலைகள், அரசசார்பற்ற நிறுவனங்கள் போன்றவற்றிலும் தேசிய கொடிக்குப் பதிலாக கறுப்புக்கொடிகளே பறக்கவிடப்பட்டிருந்தன.

யாழ்.குடாநாட்டில், யாழ்.பல்கலைக்கழக வாயிலில் வாழை மரங்கள் நடப்பட்டிருந்ததுடன் தோரணங்களும் கட்டப்பட்டிருந்தன. கொடிக்கம்பத்தில கறுப்புக் கொடி பறந்தது. அப்பகுதியில் ஒலிபெருக்கிகள் பொருத்தப்பட்டு சோக கீதங்கள் இசைக்கப்பட்டன.

யாழ்.நகரம் உட்பட, குடாநாட்டின் புறநகர் பகுதிகளிலும் வீதிகளின் குறுக்காக (10 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவிலும் கறுப்பு நாள்

# மக்கள் எவருமே செல்லவில்லை சுதந்திர தின இசை நிகழ்வு ரத்து

(வவுனியா)

சுதந்திர தினத்தையொட்டி, வவுனியா மகா வித்தியாலயத்தில் பெருமெடுப்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சுதந்திர தினக்கொண்டாட்ட நிகழ்ச்சிகள், பொதுமக்கள் சமூகமளிக்காமையால் ரத்துச்செய்யப்பட்டன.

வன்னி புனர்வாழ்வு அமைச்சின் அனுசரணையுடன், மேற்படி பாடசாலையில் சுதந்திரதினக் கொண்டாட்டத்திற்கான நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

மிகவும் கோலாகலமாக நடாத்தத் (10 ஆம் பக்கம் பார்க்க)

# மாவட்ட தேவை மதிப்பீடு நாளையதினம் சமர்ப்பிப்பு

## சிறான் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு- கிழக்கில் மேற்கொள்ளவேண்டிய அவசர, மனிதாபிமான, புனர்வாழ்வுச் செயற்திட்டங்கள் தொடர்பான தேவை மதிப்பீட்டு அறிக்கைகளை, நாளை மறுதினத்துக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டுமென கிளிநொச்சியிலுள்ள 'சிறான்' தலைமை அலுவலகம், தேவை மதிப்பீட்டுக் குழுக்களுக்கு பணிப்புரை செய்துள்ளது.

'சிறான்' செயலகத்தின் மூலமாக மேற்கொள்ளப்படவேண்டிய செயற்திட்டங்கள் குறித்து தேவை (10 ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணாணம் விநாசியர்



அமைதி உங்களுக்கெல்லோ லாபம், எங்களுக்குத்தான் ஒண்டையும் காணயில்ல...!

# ஐந்து பில்லியன் ரூபாவை அமைதியால் மீதப்படுத்தினோம்!



## கட்சி உறுப்பினரிடையே ரணில் பேச்சு

(கொழும்பு)

அமைதி முயற்சிகளின் பெறுபேறாக - கடந்த வருடத்தில் மட்டும் ஐந்து பில்லியன் ரூபா பாதுகாப்புச் செலவீனத்திலிருந்து மீட்கப்பட்டுள்ளது, இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கெக்கிராவையில் - ஐக்கிய தேசியக்க்ட்சி உறுப்பினர்களிடையே உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார். (10 ஆம் பக்கம் பார்க்க)

# பாதுகாப்பு வலயம் சட்டவிரோதம்; சதீஸ் நம்பியார் இதை அறிவாரா?

## கேள்வியெழுப்புகின்றார் நாடாளுமன்ற உறுப்பினர் விநாயகமூர்த்தி

(யாழ்ப்பாணம்)

"அரசினால் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக, இந்திய இராணுவ நிபுணர் சதீஸ் நம்பியார் ஆராய்வதற்கு முன்னர், இந்த உயர்பாதுகாப்பு வலயம் சட்டபூர்வமானதா என்பது பற்றிச் சிந்திக்க வேண்டும்" இவ்வாறு கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி தெரிவித்துள்ளார்.

நேற்று அவரது இல்லத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறும்போது -

பொதுமக்களின் குடியிருப்புப் பகுதிகளில் சட்ட விரோதமான முறையில் அரசினால் பிரகடனப் படுத்தப்பட்டிருக்கும் உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக ஆராய்வதற்காக, இந்திய இராணுவ நிபுணரான சதீஸ் நம்பியார் இன்று யாழ்ப்பாணம் விஜயம் செய்யவுள்ளார்.

இங்கு வரும் இந்திய இராணுவ நிபுணருக்கு, உயர்பாதுகாப்பு வலயம் சட்டவிரோதமானது எனபது பற்றித் தெரியுமா? இவ்வாறான சட்ட விரோமான ஒரு பிரகடனம் தொடர்பாக வெளிநாட்டு இராணுவ நிபுணர்கள் ஆராய்ந்து, எவ்வாறான அறிக்கை (10 ஆம் பக்கம் பார்க்க)

# பாதுகாப்பு வலயத்தில் விட்டுக்கொடுப்பு இந்திய அரசு விரும்பவில்லையாம்!

## மகிந்த ராஜபக்ஷ அழைக்கப்பட்டதற்கு இதுவே காரணம்?

(லண்டன்)

உயர்பாதுகாப்பு வலயம் சம்பந்தமாக இலங்கை அரசு புலிகளுக்கு விட்டுக்கொடுக்கக் கூடாது. இதை இலங்கை அரசாங்கத்துக்கு உணர்த்தவே, இலங்கை எதிர்க்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ஷவை அழைத்து, அவர் மூலம் ஒரு செய்தியை அனுப்பவே இந்திய அரசாங்கம் எண்ணியுள்ளது. இவ்வாறு புது டெல்கியிலுள்ள, ஜவகர்லால் நேரு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் சகாதேவன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இந்தியா இரு நிலைகளில் தனது எணணத்தை வெளிப்படுத்தியுள்ளது. ஆரம்ப நிலையில் எப்படியாவது சமாதானம் இலங்கையில் வரவேண்டும் என்பது, மற்றது பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து இடம்பெற்று வந்ததனால் இந்தியா தனிமைப்படுத்தப்பட்டுவிடுமோ என்ற எண்ணத்தில் தற்பொழுது தனது எண்ணத்தை மாற்றியுள்ளது என்றும் அவர் கூறினார்.

இதேவேளை - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையில் தற்போது நடைபெறும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் (10 ஆம் பக்கம் பார்க்க)

SERENDIB AIRLINE
யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்
021 - 2223916, 0777 - 517019
01-505632, 074-612656, 01-390128
(சி-518)

## சின்னஞ் சிறு செய்திகள்

### கச்சதீவுக்குச் செல்லும் படகுகளுக்கு அனுமதி பெறுக!

வரும் பங்குனி மாதம் முதல் வாரத்தில் நடைபெறவுள்ள கச்சதீவு புனித அந்தோனியார் யாத்திரை ஸ்தல பெருவிழாவிற்கு படகுச்சேவை மேற்கொள்ள விரும்பும் தனியார் படகு உரிமையாளர்கள், ஊர்காவற் துறை கடற்படை அதிகாரியிடம் முன்கூட்டியே அதற்குரிய அனுமதியினைப் பெற்றுக்கொள்ளுமாறு, நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர். திரு.எஸ்.பேரானந்தன் தெரிவித்தார். (113)

### ஐ.ஐ.எஸ். நிறுவனத்தின் ஏழாவது ஆண்டு நிறைவு

ஐ.ஐ.எஸ். நிறுவனத்தின் ஏழாவது ஆண்டு நிறுவன தினமும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் எதிர்வரும் சனிக்கிழமை சென்ஜோன்ஸ் கல்லூரி ஜூபிலி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி நிறுவனத்தின் சான்றிதழ் வழங்கும் வைபவத்தில், சிறப்புசத்தியெய்திய மாணவர்களுக்கு தங்கப்பதக்கம் உட்பட பல சிறப்பு விருதுகள் வழங்கப்படவுள்ளன. ஜெனற் மரியசாந்தி ஜோன் அன்ரனிஸ"க்கு தங்கப் பதக்கமும், சிவாஜினி இராஜதுரை, தேவகி திருநாவுக்கரசு, புண்ணியமூர்த்தி தேவகரன், சண்முகரட்ணம் சுதாகர், பாலசிங்கம் கஜேந்திரன் ஆகியோருக்கு சிறப்பு விருதுகளும் வழங்கப்படவுள்ளன.

### நன்னீரை சிக்கனமாக பயன்படுத்துமாறு பளையில் கோரிக்கை

அடுத்த ஆறு மாதங்களும் கடும் வரட்சி நிலவும் எனவும், இதனால் நீர்ப்பற்றாக்குறை ஏற்படக்கூடும் எனவும் அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

ஆகவே, பளைப் பிரதேசத்தினை சேர்ந்த பொதுமக்கள் நன்னீரை சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளைப் பிரதேச மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது. (115)

# தனிச்சிங்களச் சட்டமும் 'ஸ்ரீ' திணிப்புமே இனப்பிரச்சினையைத் தோற்றுவித்தன

## 20 வருடங்கள் நாடே செயலிழந்தது என்கிறார் அமைச்சர் கொடித்துவக்கு

1956 இல் தனிச் சிங்களச் சட்டமும், 1958 இல் சிங்கள 'ஸ்ரீ' யை வாகனங்களில் பொறிக்குமாறு திணித்ததும்தான் இனப்பிரச்சினைக்குத் தோற்றுவாயாகி - கடந்த இருபதாண்டுகளாக நாட்டையே முற்றுமுழுதாக செயலிழந்து போகும் நிலைக்கு ஆளாக்கின என, மனிதவள, கல்வி, பண்பாட்டு விவகார அமைச்சர் கருணா சேன கொடித்துவக்கு தெரிவித்தார்.

மகரகம தேசிய இளைஞர் சேவைகள் நிலையத்தில் நடைபெற்ற வைபவமொன்றில் பேசும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசும் போது, இனவெறிக் கொள்கைகளுடைய சிங்கள அரசியல்வாதிகளால் இனக் குழுக்களுக்கிடையிலான அமைதியும் ஒருங்கிணைப்பும் குழப்பப்பட்டன.

அதேவேளை, 1961 இல் மத நிறுவனங்களால் நடாத்தப்பட்ட - அனைத்துப் பாடசாலைகளும் தேசியமயமாக்கப்பட்ட முட்டாள்தனமான நடவடிக்கை அரசியலை பாடசாலைகளுக்குள் நுழைய வைத்தது.

தேசிய கல்விக் கொள்கை என்று எதுவும் கடந்த காலங்களில் இருக்கவில்லை. தகுதியின்றியே ஆசிரியர்கள் தெரிவாகினர். இதனால் பாடசாலைகளில் நம்பிக்கையிழந்த பெற்றோரும் மாணவர்களும் தனியார் கல்வி நிலையத்தை நாடவேண்டி வந்தது என்றும் அவர் கூறினார்.


ராஜா யாழ்ப்பாணம்.
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தினவெளியீடு
விஜய், ஸ்நேகா நடித்த
வசீகரா




10.30, 2.30, 6.00, 9.30 (சி-545)
ரிக்கற்றுக்களை முன்பதிவு செய்துகொள்ளவும்.



நிறஞ்சனாஸ் சங்கானை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
எம்.ஜி.ஆர்., ராதாசலூஜா நடித்த
இதயக்கனி
வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 காட்சி
THE MUMMY RETURNS (சி-544)


## இன்றைய நாள் இனிய நாள்

**05-02-2003 - புதன்கிழமை**

| | | |
|---|---|---|
| மேடம் | :- | மனக்கவலை, தேகமெலிவு, பயனற்ற பிரயாசம், வீண் பயம் |
| இடபம் | :- | காரிய வெற்றி, புத்திக் குறைவு, அவமானம், ஊக்க மிகுதி |
| மிதுனம் | :- | சந்தோஷம், அதிக பிரயாசம், இல்லச் சிறப்பு, பூமிலாபம் |
| கர்க்கடகம் | :- | மனக்கவலை, பயம், தேகசுகக் குறைவு, தேக மெலிவு |
| சிங்கம் | :- | பல வழிகளிலும் செலவு, தேகசுகம், அதிகார வெற்றி |
| கன்னி | :- | சிநேகலாபம், இனசன கொண்டாட்டம், பணவரவு, சந்தோஷம் |
| துலாம் | :- | பொறாமை, ஏமாற்றம், வீண்பயம், பொருள் நஷ்டம், |
| விருச்சிகம் | :- | தேக ஆரோக்கியம், பெண்கள் உதவி, அதிகார சித்தி, பிரயாணம் |
| தனு | :- | வாக்குக் கலகம், கொடுக்கல் வாங்கல் பிணக்கு, வீண் பிரயாசம் |
| மகரம் | :- | விவாகாதி நன்மை, இல்லச் சிறப்பு, அயலவர் உதவி, சந்தோஷம் |
| கும்பம் | :- | திருடர் பயம், விண் பிரயாசம், புத்திரரால் கஷ்டம் தேக மெலிவு |
| மீனம் | :- | பணவரவு, பெரியோர் மதிப்பு, உயர்ந்த நிலை, குடும்ப மகிழ்ச்சி |

பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்

## சின்னஞ் சிறு செய்திகள்

### பிப்பிலி மயானம் சிரமதானம்

மானிப்பாய் பரிஷ் லியோக் கழகத்தின் ஏற்பாட்டில் மானிப்பாயிலுள்ள பிப்பிலி மயானம் சிரமதான அடிப்படையில் துப்புரவு செய்யப்பட்டது.

அதிகப்படியான பற்றைகள் நிரம்பக் காணப்பட்ட இம்மயானம், நேற்று முன்தினம் லியோக் கழக உறுப்பினர்கள், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை மாணவர்கள், மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவர்கள் மற்றும் பட்டினசபை ஊழியர்கள் ஆகியோரால் துப்புரவு செய்யப்பட்டது.

### அறுவடைக்குத் தயாரான உருளைக் கிழங்குகள் திருட்டு

கரந்தன் பிரதேசத்தில் விவசாயிகளினால் நடுகைசெய்யப்பட்ட உருளைக்கிழங்குகள் கடந்த சனிக்கிழமை இரவு பெய்த மழையைப் பயன்படுத்தித் திருடர்களால் திருடப்பட்டன.

அறுவடைக்குத் தயாராக இருந்த உருளைக்கிழங்குகளில், சுமார் இரண்டு சாக்கு உருளைக்கிழங்குகளை திருடர்கள் மழையைப் பயன்படுத்தி திருடிச்சென்றதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

### திருத்தப்படும் அரச களஞ்சியம்

நாவற்குழியில் அமைந்துள்ள அரச களஞ்சியக் கட்டடத்தொகுதி மீண்டும் திருத்தம் செய்யப்பட்டு வருகிறது.

இக்கட்டடத்தை 1999 ஆம் ஆண்டு காலப்பகுதியில் G.T.Z. நிறுவனம் பொறுப்பேற்று பூரணமாக திருத்தம் செய்து கொடுத்தது.

அதன்பின் இக்கட்டடத் தொகுதியினுள் பொருட்கள் களஞ்சியப் படுத்தப்பட்டன. 2000 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏற்பட்ட போர் அனர்த்தங்களால் அக்களஞ்சியம் மீண்டும் பெரும் சேதத்திற்குள்ளானது குறிப்பிடத்தக்கது. (108)


பனைவளம் மிக்க யாழ் மண்ணில்
உலகத்தரம் மிக்க உன்னத சாதனங்கள்

SHARP
ஜப்பானில் இருந்து....




பிறவுண்ஸ்
வாடிக்கையாளர்களுக்காக

பிறவுண்ஸ் இலத்திரனியல் பிரிவு...
ஷாப் மற்றும் ஏனைய உலகத் தரமிக்க வீட்டுப் பாவனை மின்னியல் உபகரணங்களை வழங்குகிறது.

பிறவுண்ஸ் விவசாயப் பிரிவு...
இரண்டு சக்கர மற்றும் நான்கு சக்கர உழவு இயந்திரங்களையும் விவசாய உபகரணங்களையும் வழங்குகிறது.

பிறவுண்ஸ் மிருக வளர்ப்புப் பிரிவு...
உங்கள் வளர்ப்புப் பிராணிகளுக்குத் தேவையான மருந்து வகைகள் அனைத்தையும் வழங்குகிறது.

பிறவுண்ஸ் இரும்புப் பொருட்கள் பிரிவு...
உங்களுக்குத் தேவையான உறுதிமிக்க இரும்பு வகைகளை வழங்குகிறது.

பணத்திற்கேற்ற பெறுமதி.

TNT Grafix

Browns
Group of Companies

இல. 89, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021-2225150
(சி-561)

# ஒடுக்கப்படுவோருக்காக புலிகள் போராடும்போது ஜே.வி.பி. ஒடுக்குவோருக்காகப் போராடுகிறது

## விக்கிரமபாகு கருணாரத்ன

(கொழும்பு)

ஏனைய அரசியல் கட்சிகளைப் போலப் புலிகளும் தமது பிரச்சினைகளை முன்னெடுக்க வானொலி உபகரணங்கள் அவசியமானதெனத் தெரிவித்திருக்கிறார் புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ன.

அரசாங்கமும் புலிகளும் சமாதான முயற்சிகளில் விசுவாசமாகவே நடந்து வருகின்றனர். அதே வேளை, அமைதிக்கு எதிரான சக்திகள் தீவிரமாகச் செயற்பட்டு வருவதையும் கவனத்தில் எடுக்கவேண்டும். இச்சக்திகள் குறித்து அரசாங்கம் விழிப்புடன் இருக்கவேண்டும்.

அமைதி முயற்சிகளுக்கு எதிரான பிரசாரங்களைச் செய்வோருக்கு, பதில் கொடுக்கக்கூடிய வகையில் தந்திரோபாயம் வகுக்கப்பட வேண்டும்.

இடதுசாரிச் சக்திகள் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு தெரிவித்தே வருகின்றன. ஜே.வி.பியும், சிஹல உறுமயவும்தான் இதனை எதிர்க்கின்றன. ஆதனால், ஜே.வி.பிக்கு மக்களிடம் இருந்து பூரண ஆதரவு கிடைக்காது. ஜே.வி.பி உண்மையான இடதுசாரிக் கட்சியாகத் தொழிற்படவில்லை.

ஒடுக்கப்படுவோருக்காகப் புலிகள் போராட, ஜே.வி.பி. ஒடுக்குவோருக்காகப் போராடுகிறது.

பாசிசமான இனவெறியுடன்தான் ஜே.வி.பி. பேசிக்கொண்டிருக்கிறது. சமாதானப் பேச்சில் என்ன விடயங்கள் பேசப்படுகின்றன என்று அறிய வேண்டும். ஆனால், எல்லா விடயங்களையும் வெளிப்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கமுடியாது.

இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சியில் வெளிநாட்டுத் தலையீடுகள் விரும்பத்தக்கதல்ல. நோர்வே போன்ற மேற்குலகச் சக்திகளின் உதவி தேவையில்லை. எனினும், மற்றைய நாடுகளைவிட நோர்வே மத்தியஸ்தப் பணியைச் சிறப்பாகச் செய்துள்ளது.

இலங்கையிலுள்ள பூர்ஷுவாக்கள் வானொலி நிலையங்களையும் தொலைக்காட்சி நிலையங்களையும் தமது சொந்த சுய லாபத்துக்காக நடத்தமுடியும் என்றால், தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு விடுதலைப் புலிகளுக்கு ஏன் இடமளிக்கக்கூடாது.

எம்மைப் பொறுத்தவரை இலங்கையில் இயங்குகின்ற ஏனைய கட்சிகளுக்கு எவ்வாறான கருத்துத் தெரிவிக்கும் உரிமையுள்ளதோ, அதேபோலவே விடுதலைப் புலிகளுக்கும் அவ்வாறான. உரிமை இருப்பது எவரும் மறுக்கமுடியாது என புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ன மேலும் தெரிவித்துள்ளார்.

## உருளைக்கிழங்கு விலை வீழ்ச்சி

யாழ்.குடாநாட்டில் உருளைக் கிழங்கு அறுவடைக்காலம் ஆரம்பமாகியதைத் தொடர்ந்து உருளைக் கிழங்கின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

தற்போது யாழ்.குடாநாட்டுச் சந்தைகளில் ஒரு கிலோ உருளைக் கிழங்கு 50 - 60 ரூபா வரை விற்பனையாகின்றது.

இதேவேளை, தென்பகுதிகளிலிருந்து பெருந்தொகையாக உருளைக் கிழங்கு சந்தைக்கு விற்பனைக்கு வருவதால், உள்ளூரில் கிழங்கு உற்பத்தியில் ஈடுபட்ட விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

(100)

## 'ஓவியா' சஞ்சிகை

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்ற ஓவியக் கலைவட்டத்தினால் 'ஓவியா' என்னும் ஓவியத்துறை சார்ந்த மாதாந்தச் சஞ்சிகை இம்மாதம் முதல் வெளியிடப்படவுள்ளது.

இச்சஞ்சிகையில் ஓவியத்துறை சார்ந்த கலைஞர்களினதும் மாணவர்களதும் பல்வேறு வகையான ஆக்கங்கள் இடம்பெறவுள்ளன.

### வங்கிகளில் செலுத்தப்படும்

## மின்சாரக் கட்டணங்களுக்கு தரகுப் பணம் அறிவிட முடிவு

வங்கிகளில் மின்சாரக்கட்டணங்களைச் செலுத்தும்போது, வங்கிகள் தரகுப்பணமாக ஒரு தொகையை அறவிட முடிவு செய்துள்ளன.

இந்த நடைமுறை பெப்ரவரி மாதம் முதல் அமுலுக்கு வருமெனத் தெரிவிக்கப்படுகிறது.

100 ரூபாவுக்குக் குறைவாக மின்சாரக் கட்டணம் செலுத்தும்போது 5 ரூபா தரகுப்பணமாக வங்கிகள் அறவீடு செய்யும்.

இது போன்று 100 ரூபாவிலிருந்து 499 ரூபா வரையான தொகைக்கு - ஒரு பட்டியலுக்கு 10 ரூபாவும், 500 ரூபாவில் இருந்து 1999 ரூபா வரையான தொகைக்கு 15 ரூபாவும், 2000 ரூபாவும் அதற்கு மேற்பட்ட தொகைக்கு 20 ரூபாவும் தரகுப்பணமாக வங்கிகள் அறவீடு செய்யும்.

வங்கியில் சராசரியாக 3000 ரூபாவை மீதியாக வைத்திருக்கும் வாடிக்கையாளருக்கு இந்தத் தரகு அறவிடப்படமாட்டாது என மக்கள் வங்கி அறிவித்துள்ளது. இந்த நடைமுறை நாட்டில் உள்ள மக்கள் வங்கிக் கிளைகளில் கடந்த திங்கட்கிழமை முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

## யாழ்ப்பாணத்தில் விமானத்தளம் அமைக்கப் புலிகள் நடவடிக்கை!

### அநுரா பண்டாரநாயக்க சொல்கிறார்

(கொழும்பு)

கட்டுநாயக்க விமானநிலைய அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் - விமானங்களின் உதிரிப்பாகங்களைப் புலிகள் தனித்தனியாகப் பொதியிட்டு, நாட்டுக்குள் கொண்டு வந்து சேர்த்திருப்பதாகப் பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் அநுரா பண்டாரநாயக்க தெரிவித்திருக்கிறார்.

புலிகளுக்கு வந்து சேர்ந்துள்ள விமானங்களின் பாகங்கள் பொருத்தப்பட்டுவருவதாகவும் - இவற்றைப் பறக்க விடுவதற்கான விமானத் தளம் ஒன்றைப் புலிகள் யாழ்ப்பாணத்தில் நிறுவ நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

நாடாளுமன்றத்தில் இடம் பெற்ற விவாத்தில் பேசியபோதே அநுரா பண்டாரநாயக்க இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் பேசுகையில்,

புலிகளுக்கு விமானங்களின் பாகங்கள் எடுத்துவரப்பட்டமை தொடர்பாக - அது பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைப் பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பில் கொண்டு வரவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

### அதிகஷ்டப் பிரதேசப் பாடசாலை ஆசிரியர்களுக்கு

## விசேட சம்பள அதிகரிப்புக்கான விபரம் திரட்டும் படிவம் விநியோகம்

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள அதிகஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு, மேலதிக சம்பள உயர்வு வழங்குவதற்கான நடவடிக்கைகளை மாகாணக் கல்வித் திணைக்களம் மேற்கொண்டு வருவதாக வடக்கு - கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ்.மகாலிங்கம் தெரிவித்தார்.

தொடர்ச்சியாக மூன்று வருடங்களுக்கு மேல் அதிகஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்பு வழங்கும் முகமாக, மேலதிக சம்பள ஏற்றம் வழங்குவதற்கான விபரங்களைத் திரட்டும் பொருட்டு, சகல வலயக்கல்விப் பணிமனைகள் ஊடாகவும் கஷ்டப் பிரதேச ஆசிரியர்களுக்குத் தனித்தனியாக விண்ணப்பங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

## புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் விசாரணை செய்ய சர்வதேசப் பொலிஸ்

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இடம்பெற்ற கடத்தல் சம்பவங்கள் குறித்து விசாரிக்கச் சர்வதேசப் பொலிஸாரின் உதவி கோரப்படவேண்டும் என இலங்கைப் பொலிஸார் தரப்பில் ஆலோசனை கூறப்பட்டிருக்கிறது.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் இலங்கைப் பொலிஸார் செல்ல முடியாதிருப்பதாலேயே, இது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளச் சர்வதேசப் பொலிஸாரை அழைக்கவேண்டும் எனப் பொலிஸார் தரப்பபில் மேலும் கூறப்பட்டிருக்கிறது.

## முதலாந்தர சமுர்த்தி அலுவலர்கள் பதில் கிராம அலுவலராக நியமனம்

### யாழ்.செயலகம் ஆலோசனை

யாழ்.மாவட்டத்தில் உள்ள கிராம உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களுக்கு முதலாந் தர சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களை நியமிப்பது குறித்து யாழ்.செயலகம் ஆலோசித்து வருகிறது.

யாழ். மாவட்த்தில் தற்போது ஒரு கிராம உத்தியோகத்தரின் கீழ் - ஒன்று முதல் 4 சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் கடமையாற்றுகின்றனர். கிராம உத்தியோகத்தர் வெற்றிடமாக உள்ள பகுதிகளுக்குச் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர் கடமையுடன், பதிற்கடமை வழங்குவதற்கும் முயற்சிக்கப்பட்டுவருகின்றது.

## சந்நிதியான் ஆச்சிரமத்தில்

சந்நிதியான் ஆச்சிரமக் கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்தம் நடைபெறும் நிகழ்வுகளில், நாளை மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு "உதித்தனன் உலகம் உய்ய" என்ற தலைப்பில் ஆசிரியர் ச.லலீசன் சொற்பொழிவாற்றுவார்.

## மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கு இரு நாட்கள் நடைபெற்ற சிகிச்சைகள்

மூளை வளர்ச்சி குன்றிய பிள்ளைகளிற்கான கருத்தரங்கு நேற்று முன்தினம் 10 மணிக்கு பல நோக்குக் கூ.சங்கக் கட்டடத்தில் நடைபெற்றது.

யாழ்.புரோமோட்டர்ஸ் நிறுவனத்தின் ஆதரவில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் - பிரதம விருந்தினராக மேலதிக அரசாங்க அதிபர் பத்தினியம்மா திலகநாயகம்போல் கலந்து கொண்டார். கொழும்பு மிலேனியம் நிறுவனத்தின் அதிபர் திருமதி. ராஜ்குமார், கொழும்பு மிலேனியம் சிறப்பு ஆசிரியர் திருமதி.சிவகுமாரன், குழந்தைகளிற்கான மனோதத்துவ சிறப்பு ஆலோசகர் ஜோனத்தன் சொலமன், லயன் இரட்ணராஜா, யாழ். மகளிர் அமைப்பு பொறுப்பாளர் கலைவிழி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து இந்நிகழ்வில் குழந்தைகளின் மனவளர்ச்சி பற்றி ஐந்து ஆசிரியர்கள் உரைவழங்கினர். பின்னர், மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகளுடன் கொழும்பிலிருந்து வந்த பயிற்சிபெற்ற ஆசிரியர்கள கலந்துரையாடி, அவர்களுக்கான சிகிச்சை முறை குறித்து ஆராய்ந்திருந்தனர். நேற்றும் இச்சிகிச்சைகள் வழங்கப்பட்டன.

இக்கருத்தரங்கிற்கு யாழ். மாவட்டத்தில் இருந்து ஏராளமான பெற்றோர்கள், தமது மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகளை கூட்டிவந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ரா)





பேர்ளின் பேச்சுக்களுக்காக விடுதலைப் புலிகளின் கிழக்குப் பிராந்தியத் தளபதி கேணல் கருணா, மட்டக்களப்பிலிருந்து புறப்பட்டுச்செல்லும் காட்சிகள்.

# பளைப் பகுதிகளில் பொலித்தீன் கழிவுகள்

# தொற்றுநோய் பரவும் ஆபத்து ஏற்படலாம்

## சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை

(பளை)

பளை நகரையும், அதனை அண்டிய பிரதேசங்களிலும் பொலித்தீன் பைகளும், கழிவுகளும் அதிகம் வீசப்படுவதால் இப்பகுதிகளில் நுளம்புகள் பெருகும் அபாயம் தோன்றியுள்ளதாக இப்பகுதிப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

இப்பகுதிகளில் பொறுப்பற்ற முறையில் பொலித்தீன்களும், கழிவுப்பொருட்களும் வீசப்படுகின்றன. முக்கியமாக ஏ-9 வீதியால் பிரயாணம் செய்யும் பிரயாணிகளும் - ஞாயிறு தினங்களில் இப்பகுதியில் தங்கிநிற்கும் பயணிகள், சாரதிகள் போன்றவர்களும் இக்கழிவுப் பொருட்களை அதிகம் வீசுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தொற்றுநோய்கள் பரவும் அபாயம் தோன்றியிருப்பதால் நகரையும், நகரை அண்டிய பகுதிகளையும் தூய்மையாக வைத்திருக்கும்படி பொதுச் சுகாதார பரிசோதகர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (115)

# 'இசற்' ஸ்கோர் அனுமதி தொடர்ந்தும் நடைமுறையில்!

(கொழும்பு)

பல்கலைக்கழக அனுமதிக்கான 'இசற்' ஸ்கோர் முறை நீக்கப்படமாட்டாது எனவும், அது தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும் எனவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

'இசற்' ஸ்கோர் முறை குறித்து ஆராய நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் அறிக்கை மற்றும் இது தொடர்பாக இரண்டு நாட்கள் நடத்தப்பட்ட நாடாளுமன்ற விவாதம் என்பவற்றின் அடிப்படையில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## 'கம்பன் மகன்' நாட்டுக் கூத்து

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத் தயாரிப்பில் 'கம்பன் மகன்' நாட்டுக்கூத்து எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம், இரண்டாம் திகதிகளில் மாலை 6.45 மணிக்கு மன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது.

அண்ணாவியார் அ.பேக்மன் ஜெயராசாவின் நெறியாள்கையில் மேடையேற்றப்படவுள்ள இந்நாட்டுக் கூத்துக்கான எழுத்துருவாக்கத்தை யோ.யோன்சன் ராஜ்குமார் மேற்கொண்டுள்ளார்.

'கம்பன் மகன்' நாட்டுக் கூத்து நூல் வடிவிலும் விரைவில் வெளியிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கந்தரோடையில் ஐம்பொன் விக்கிரகங்கள் திருட்டு!

கந்தரோடை, கற்பொக்குணை விநாயகர் ஆலயத்தில் நேற்று முன்தினம் இரவு பெறுமதிமிக்க ஐம்பொன்னால் செய்யப்பட்ட இரு விநாயகர் எழுந்தருளி விக்கிரங்கள் திருடப்பட்டன.

மேற்படி ஆலயம் பாலஸ்தானம் செய்யப்பட்டு, புதிய கட்டட வேலைகள் நடைபெற்று வருகின்றது. விரைவில் கும்பாபிஷேகம் நடைபெறவுள்ள நிலையில் திருடர்கள் ஆலயக் கதவை உடைத்து விக்கிரகங்களைத் திருடியுள்ளனர்.

## மருத்துவ சேவைகளுக்கு இலவச வாகன வசதி

மக்கள் நலன்புரிச் சங்க முதலுதவிப் பிரிவினால் வறுமைக்கோட்டுக்குட்பட்ட மக்களுக்கும், உடனடியாக வாகன வசதி தேவைப்படுவோருக்கும் - வைத்தியசாலைகளுக்கு நோயாளர்களை அழைத்துச் செல்வதற்கு - இலவசமாக முச்சக்கர வாகன உதவி செய்து கொடுக்கப்படும்.

இவ்வாகனத்தை இந்து கலாசார அமைச்சர் மகேஸ்வரன் அன்பளிப்பாக வழங்கவுள்ளார்.

வாகன வசதி தேவைப்படுவோர் 0777065842 அல்லது 222-5219 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு வாகன உதவியைப் பெறலாம்.

யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதி மக்களுக்கே இச்சேவை வழங்கப்படும் என மக்கள் நலன்புரிச் சங்கமும் படையணிகளும் அறிவித்துள்ளது.

# சேதமுற்ற சனசமூக நிலையங்களை மீள ஆரம்பிக்க உதவுதொகை

## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை வழங்கும்

(பளை)

பளைப் பகுதியைச் சேர்ந்த சனசமூக நிலையங்களுக்குக் குறிப்பிட்ட தொகைப்பணம் நன்கொடையாக வழங்கப்படவுள்ளது.

யுத்த காலத்தின் பின்னர் இப்பிரதேசத்திலுள்ள சனசமூக நிலையங்கள் இயங்கமுடியாத நிலைக்குப் பாதிக்கப்பட்டுள்ளதால், மீளவும் இவற்றை இயங்க வைப்பதற்காக நன்கொடை வழங்குவதற்கான கூட்டம் எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சனசமூக நிலையத் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரைக் கலந்துகொள்ளுமாறு பச்சிலைப்பள்ளி பிரதேச சபைச் செயலாளர் இ.து.சிவராசா வேண்டுகோள் விடுத்துள்ளார். (115)

# நீரிழிவு நோய் DIABETES

பகுதி 10


- ச.ஆ.கோபாலமூர்த்தி.




படம் 1

படம் 1 இல், விரல் ஊசிகுற்றியில் (LAN-CET PRICKER) ஒவ்வொரு தடவையும் புதிய விரல் ஊசி (LANCET) ஒன்றைப் பொருத்தியபின்- முன்புறத்தை ஒரு விரலில் அழுத்திப் பிடித்துக் கொண்டு பொத்தானை அழுத்தியதும் விரல் ஊசி தானாகவே விரலில் குற்றிவிடும். தனது விரலில் தானே குற்றி இரத்தத் துளியைப் பெறுவதற்கு இக்கருவி பெரிதும் உதவியாயிருக்கும்.

படம் 2 இல், காணப்படும் குளுக்கோமீற்றர் மிகவும் நவீனமானது. இரத்தம் சோதிக்கப்படும் நேரம், திகதி, மாதம், ஆண்டு, சோதிக்கப்பட்ட இரத்தத்தில் இருந்த குளுக்கோசின் அளவு என்பவற்றைப் பல நாட்களுக்குத் தொடர்சியாக ஞாபக அலகில் (MEMORY UNIT) பதிந்து வைத்திருக்கக்கூடியது. இதில் இருக்கும் பதிவுகளை (INFRA RED) தொழில் நுட்பத்தின் மூலம் கணினிக்கு அனுப்பக் கூடியது. இதன் மூலம் ஒருவர் வாழ்நாள் முழுவதிலும் மேற்கொண்ட பரிசோதனை முடிவுகளைத் தனது கணினியில் பதிந்து வைக்கும் வாய்ப்புக்கிட்டியுள்ளது.




படம் 2

*(நேற்றைய தொடர்ச்சி)*

ஒரு வகைக் குளுக்கோமீற்றரில் பயன்படுத்தப்படும் கீலத்தை வேறொரு வகைக் குளுக்கோமீற்றரில் பயன்படுத்தமுடியாது. இக்கீலங்களில் இரத்தத்துடன் தாக்கமுற்று, நிறம் மாறத்தக்க இரசாயனப் பொருட்களில் தோய்க்கப்பட்ட பஞ்சுத்துண்டு ஒன்று ஒட்டப்பட்டிருக்கும். ஒரு விரலில், ஊசியினால் குற்றி, ஒரு துளி இரத்தத்தை இந்தப் பஞ்சின் மீது விட்டபின், குளுக்கோமீற்றரில் கீலத்தைப் பொருத்தினால் சில விநாடிகளில் இரத்தத்திலுள்ள குளுக்கோசின் அளவைக் குளுக்கோ மீற்றர் எண்களில் காட்டும். கீலத்தைக் குளுக்கோமீற்றரில் பொருத்திய பின்னர், கீலத்திலுள்ள பஞ்சில் இரத்தத் துளியை விட்டுப் பரிசோதிக்கும் வகைக் குளுக்கோமீற்றர்களும் உண்டு. இரத்தத்துளிக் கீலங்களிலுள்ள இரசாயனப் பொருள் அதிக ஈரப்பதனினால் நிறம்மாறத்தக்கது. எனவே இரத்தம் சோதிக்கும் வேளையில்தான், கீலத்தை அது வைக்கப்பட்டிருக்கும் டப்பியிலிருந்து வெளியே எடுக்கவேண்டும்.

குளுக்கோமீற்றர், நிறமாற்றத்தைத் துல்லியமாகக் கணித்தே குளுக்கோஸின் அளவைக் காட்டும். இரத்தத்துளி தோய்ந்த பஞ்சு வைக்கப்படும் இடத்தில் பனிப்படிவு, இரத்தக்கறை, தூசு, கறை போன்றவை இருந்தாலும் அந்த இடம் சுரண்டப்பட்டு அல்லது ஸ்பிறிற் போன்ற பொருட்களால் துடைப்பதன் மூலம் அதன் ஒளிபுகவிடும் தன்மை குறைந்திருந்தாலும் குளுக்கோமீற்றர் சரியான அளவைக்காட்டாது. சூரிய ஒளி, நேரடியாகப் பஞ்சு வைக்கப்படும் இடத்தில் பட்டாலும் கருவி சரியான அளவைக் காட்டாது. இந்தக் கருவி இலத்திரன் தொழிநுட்பத்தினால் இயங்குவதால் காந்தப்புலம் உள்ள பொருட்கள் (ரியூப் லைற்) இருக்கும் இடங்களிலும் சரியான அளவைக் காட்டாது.

மேலும், குளுக்கோமீற்றரினதும் கீலத்திலுள்ள பஞ்சில் தோய்க்கப்பட்டிருக்கும் மருந்தின் வீரியமும் அடிக்கடி பரிசோதனைக்கு உட்படுத்தப்படவேண்டும். இதற்கென ஒவ்வொரு குளுக்கோமீற்றர் தயாரிக்கும் கம்பனியும் சோதனைக் கரைசல் (CONTROL SOLUTION) போத்தல்களை அல்லது சோதனைக்கீலம் (CHECK STRIP) ஐ விற்பனை செய்யும். சோதனைக் கரைசல் துளியொன்றைக் கீலத்தில் இரத்தத்துளிக்குப் பதிலாக விட்டுச் சோதிக்கும்போது குளுக்கோமீற்றர் காட்டும் வாசிப்பு, சோதனைக் கரைசல் போத்தலில் குறிப்பிடப்பட்டிருக்கும் அளவுக்குள் இருந்தால் குளுக்கோமீற்றரும் கீலமும் இரத்தப் பரிசோதனை செய்வதற்கு ஏற்றநிலையில் இருக்கின்றன எனக் கொள்ளப்படும். *(தொடரும்)*


வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

மூன்றாவது அகவையில்

HAPPY BIRTHDAY



பெயர் : ந.நிகாஷன்
முகவரி: வதனகிரி,
அல்வாய் வடக்கு.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:----------------------------------------

முகவரி:----------------------------------------

பிறந்த ஆண்டு:----------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------
பெற்றார் ஒப்பம்


## மாநகரசபை யாழ்ப்பாணம்

### கட்டட நிர்மாண வேலைகளுக்கான மூலப்பொருட்களை வழங்கக்கூடியவர்களை கோரும் விண்ணப்பம் - 2003

மாநகரசபை வேலைத்திட்டங்களுக்கு வேண்டிய கீழ்க்காணும் மூலப்பொருட்களை விரைவாக வழங்கக்கூடிய வழங்குநர்களைக் கோருதல்.

| கற்கள் | அளவு | மாநகரசபை எல்லைக்குள் கொண்டு வந்து வழங்கல் விலை | கிறசர் நிலையத்தில் உள்ளவாறு விலை |
|---|---|---|---|
| 1. 1/2″ அளவுள்ள கிறசர் சல்லி | 1 கியூப் | .......... | .......... |
| 2. 3/4″ அளவுள்ள கிறசர் சல்லி | 1 கியூப் | .......... | .......... |
| 3. 1″ அளவுள்ள கிறசர் சல்லி | 1 கியூப் | .......... | .......... |
| 4. 1 1/2″ அளவுள்ள கிறசர் சல்லி | 1 கியூப் | .......... | .......... |
| 5. 2″ அளவுள்ள கிறசர் சல்லி | 1 கியூப் | .......... | .......... |
| 6. 4″ அளவுள்ள கிறசர் சல்லி | 1 கியூப் | .......... | .......... |
| 7. 6″X9″ அளவுள்ள கற்கள் | 1 கியூப் | .......... | .......... |
| மணல்வகை | | | |
| 1. நாகர்கோயில் மணல் | 1 கியூப் | .......... | |
| 2. அரியாலை மணல் | 1 கியூப் | .......... | |
| 3. வரணி மணல் | 1 கியூப் | .......... | |
| 4. ஊரிமண் | 1 கியூப் | .......... | |

முடிவுத்திகதி 13.02.2003 ஆம் திகதி மு.ப 10 மணிக்குப் பிந்தாமல் மேற்காட்டப்பட்ட வடிவில் படிவம் தயாரித்து பூர்த்திசெய்து பதிவுத்தபாலில் அல்லது நேரில் யாழ்.மாநகர ஆணையாளர் அவர்களுக்கு முகவரியிட்டு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.


மாநகர ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

(சி-559)

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை

## தோற்றும் மாணவர்களுக்கான முன் ஆயத்தப் பயிற்சிகள்






### வினாப்பத்திரம் - 11

● இவ்வினாப்பத்திரம் தொடர்பான குறிக்கோள்கள் கீழே தரப்பட்டுள்ளன.

01. தரம் 1 முதல் ஐந்து வரையில் வகுப்பறையில் கற்பிக்கப்படும் சகல பாடப்பரப்புக்களில் அடங்கியுள்ள விடயங்களின் துணையுடன் மாணவர் திரட்டியுள்ள திறன்களை நுணுகி ஆராய்தல்.

02. பாடநூல்களைப் பயன்படுத்துவதன் மூலம் மாணவர்கள் பெறும் பாட அனுபவங்களை ஆராய்தல்.

03. ஆசிரியர் கைந்நூல், ஏனைய கற்றல் கற்பித்தற் சாதனங்களின் துணையுடன் ஆசிரியர் வழங்கும் அனுபவங்கள் ஆகியன காரணமாக மாணவரிடத்தே விருத்தியடைந்துள்ள அறிவு, மனப்பாங்கு, திறன் ஆகியவற்றை மாணவரின் வயது மட்டத்திற்கேற்ப கணிப்பீடு செய்தல்.

04. மாணவர் பல்வேறு பாடங்களினூடாக வகுப்பறையிற் கற்கும் கோட்பாடுகள் பற்றிப் பெற்ற அறிவினை நாளாந்தம் ஏற்படுகின்ற நிகழ்ச்சிகளுடன் தொடர்புபடுத்தக் கூடிய ஆற்றலைக் கணிப்பீடு செய்தல்.

05. தமது வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வகுப்பறையிற் கற்கும் கோட்பாடுகளைப் பயன்படுத்தும் ஆற்றலைக் கணிப்பீடு செய்தல்.

06. வகுப்பறையில் மாணாக்கர் ஈடுபடும் ஒப்படைகள், செயற்றிட்டங்கள் போன்ற குழு நடவடிக்கைகள், தனிப்பட்ட செயற்பாடுகள் ஆகியவற்றின் துணையுடன் அவர்கள் பெறும் அனுபவங்களை ஆராய்தல்.

07. பாடத்திட்டத்தோடு இணைந்த பல்வேறு தொழிற்பாடுகளும், அனுபவங்களும் காரணமாக மாணவரிடையே ஏற்படும் ஆக்கத்திறனை கணிப்பீடு செய்தல்.

### பயிற்சிகள்

● இப்பாடல்களைப் படித்து 1 முதல் 15 வரையுள்ள வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.

○ பூவின் மேலே பூவொன்று
பூத்திருக்கும் புதுமையைப் பார்
நண்பனே அது பூவல்ல
வண்ணத்துப் பூச்சி யல்லோ

○ நல்லறிவு அழகு குணம்
நல்லொழுக்கம் நற்பண்பு
எல்லாம் நிறை மேலோரே
நல்ல றோசாப் பூக்களாம்

○ மதிப்புடைய மரங்களில்
மனம் கவரும் விதங்களில்
நிறம் நிறமாய்ப் பூத்திருக்கும்
பூக்கள் சிரிப்புக் குவியல்களே

1. அறிவு என்பதன் கருத்து யாது? ..............................

2. இங்கு குறிப்பிடப்படும் மலர் வகை எது? ..............................

● கீழே தரப்பட்டுள்ள சொற்களுக்குரிய ஒத்த கருத்துச் சொற்களை எழுதுக.

3. மதிப்பு ........................ 4. நண்பன் ........................

● கீழே தரப்பட்டுள்ள சொற்களுக்குரிய எதிர்க் கருத்துள்ள சொற்களை எழுதுக.

5. நற்குணம் ........................ 6. அது ........................

7. "பூவின் மேலே பூவொன்று" என்பதால் கருதப்படுவது யாது?
..............................................................

● பாடலில் குறிப்பிடப்படும் வண்ணத்துப்பூச்சி தவிர்ந்த வேறு இரண்டு உயிருள்ள பெயர்ச் சொற்களை எழுதுக.

8. ........................ 9. ........................

10. "வண்ணத்துப்பூச்சி பறக்கின்றது" இந்த வாக்கியத்தைப் பன்மையாக்கி எழுதுக.
..............................................................

11. "பூமரங்கள் காற்றில் அசைகிறது" இது மாணவர் ஒருவரால் எழுதப்பட்ட வாக்கியமாகும். இந்த வாக்கியத்தைத் திருத்தி எழுதுக.
..............................................................

● கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு சொல்லுக்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை (ஆங்கில எழுத்துக்களில்) புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

12. மரம் ........................ 13. பூ ........................

14. வண்ணத்துப்பூச்சி ........................ 15. நிறம் ........................

● பின்வரும் ஒவ்வொன்றையும் ஆங்கில எழுத்துக் குறியீடுகளுடன் திருப்பி எழுதுக.

1. 280 கிலோ கிராம் .................... 2. 124 கிலோ மீற்றர் ....................

3. 23 மில்லி லீற்றர் .................... 4. 72 சென்ரி மீற்றர் ....................

● கீழ்வரும் ஒவ்வொரு கூற்றும் சரியாயின் (✓) என்ற அடையாளத்தையும், பிழையாயின் பிழை (X) அடையாளத்தையும் அக்கூற்றின் புள்ளிக்கோட்டில் எழுதுக.

1. விளையாட்டுத் திடலில், சிறிய அளவிலான வளையத்திலிருந்து படிப்படியாக பெரிய அளவிலான வளையம் வரை, பல வளையங்களின் ஊடாக நுழைந்து வெளியே வருவதற்குப் பயிற்சியைப் பெறவேண்டும். (............)

2. "தீராத விளையாட்டுப் பிள்ளை" என்னும் சிறுவர் பாடலானது நான்கு எண்ணிக்கை தாளத்திற்கு உதாரணமாகும். (............)

3. உடற்பயிற்சிக்காக மிகவும் பொருத்தமானது பகல் 11.00 முதல் 11.30 வரையுள்ள காலமாகும். (............)

4. பாய்தல், விழுதல், படுத்தல் ஆகிய செயற்பாடுகள் மூன்றினாலும் ஒரே அளவான திறன்கள் விருத்தியே நடைபெறுகின்றது. (............)

5. ஆடையொன்றின் கிழிந்த பகுதிகளைத் தைப்பதற்கு குறுக்குத் தையலைப் பயன்படுத்தலாம். (............)

6. நின்ற இடத்திலேயே ஓடுதல் பயிற்சியில் ஈடுபடுவதால், ஓடும்போது உடல் வடிவத்தை பேணுகின்ற பழக்கத்தைப் பெறமுடியும். (............)

7. கிளியொன்றின் மாதிரி உருவத்தைச் செய்வதற்கு மிகவும் பொருத்தமான மூலப்பொருளாகக் குருத்தோலையைப் பயன்படுத்த முடியும். (............)

8. செம்பு நடனம், கிராமிய நடனங்களுக்கு ஓர் உதாரணமாகும். (............)

9. மனதில் தோன்றும் காட்சி ஒன்றைக் கற்பனை செய்து சித்திரத்தினூடாக முன்வைத்தல் 'கற்பனைச் சித்திர ஆக்கம்' எனப்படும். (............)

10. முண்டத்தை நிமிர்த்தி வைத்து கைவிரல்களை மடித்து தொடைகளிற் தொடுமாறு வைத்து கால்களை அருகருகே வைத்துச் சமநிலையாக நிற்றலை, இலகுவாய் நிற்றல் என்று அழைப்பர். (............)

11. வீதியைக் கடந்து செல்லும்போது முதலில் வலப்பக்கமும் இரண்டாவதாக இடப்பக்கமும் பார்த்து மீண்டும் வலப்பக்கம் பார்த்து விரைவாகக் கடந்து செல்ல வேண்டும். (............)

12. முண்டத்தை நிமிர்த்தி வைத்து கைவிரல்களை முஷ்டியாக மடித்து தொடையில் தொடுமாறு வைத்து கால்களை அருகருகே வைத்துச் சமநிலையில் நிற்றல் இலகுவாய் நிற்றல் எனப்படும். (............)

13. வர்ணங்களைத் தெளித்தல் மூலம் படங்களை உருவாக்குதல் 'ஸ்ரென்சில்' ஆக்கம் என்னும் பெயரால் அழைக்கப்படும். (............)

14. மின்னல் மின்னும் வேளைகளில் முதலில் இடிஇடிக்கும் சத்தம் கேட்டுப் பின்னர் பிரகாசமான ஒளி தென்படும். (............)

15. ஃபக்ஸ் இயந்திரம் (தொலைநகல்) மூலம் சொற்களை மட்டுமன்றி உருவங்களுடன் செய்தியையும் அனுப்பமுடியும். (............)

● அடைப்பினுள் உள்ள சொற்களிலிருந்து திருத்தமான சொல்லைத் தெரிவு செய்து வெற்றிடங்களை நிரப்புக.

கத்தரிக்கோல், கைவில்லை, பாக்குவெட்டி, கவர்ச் சுத்தியல், அரம், தீதாள், கைத்தாளம், உடுக்கு

1. சிறு பொருட்களை பெருப்பித்துப் பார்ப்பதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணம்
..............................................................

2. கத்தியைத் தீட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணம்
..............................................................

3. இரும்பாணியைக் கழற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணம்
..............................................................

4. தாளம் போடுவதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணம்
..............................................................

5. தைக்கும்போது பாதுகாப்பிற்காகப் பயன்படுத்தப்படும் உபகரணம்
..............................................................

(தொடரும்)

வி.என்.எஸ்.உதயச்சந்திரன்
B.A. (Cey) B.Ed(Hons) Dip.in.Ed.

### அன்பார்ந்த பெற்றோர்களே!

5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பாகத் தற்போது நாம் வெளியிட்டுவரும் மாதிரி வினாத்தாள் வழிகாட்டல் குறிப்பு தொடர்பாக உங்களிடமிருந்து அபிப்பிராயங்களையும் ஆலோசனைகளையும் எதிர்பார்க்கின்றோம்.



உங்கள் ஆலோசனைகளை, அபிப்பிராயங்களை
மாணவர் மலர்,
நமது ஈழநாடு,
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள்

- பொறுப்பாசிரியர்.

# A/L பரீட்சையில் புவியியல் பாடத்தில் 'A' தரத்தை இலகுவாகப் பெற வழி என்ன?

இன்றைய கல்வி உலகில் மாணவர்கள் மத்தியிலும், பெற்றோர்கள் மத்தியிலும் விளங்கிக் கொள்ள முடியாத, புரிந்து கொள்ள முடியாத, விடைகாண முடியாத பெரும் பிரச்சினைகளில் ஒன்றாக இருந்து வருவது க.பொ.த உயர்தரப் பரீட்சையில் இலகுவாக 'A' தரத்தினைப் பெறமுடியாது என்பதாகும். சில வேலைகளில் இது புரையோடிப் போன ஒரு பிரச்சினையாகவும் இருந்து வருகின்றது. அன்றைய காலங்களில் புவியியல் என்னும் பாடத்தினை விரும்பிக் கற்றவர்கள் அநேகம் அநேகம் பேர். இப்பாடத்திலுள்ள விருப்பு, கவர்ச்சி என்பவை மட்டுமல்லாது - இப்பாடத்தை கற்பதன் மூலம் எம்மையும், எம்மைச் சார்ந்த சூழலையும், உலகையும், நாட்டு நடப்புக்களையும் அறிந்து கொள்ள முடியும் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கைகளுடன் கற்றனர் அநேகம் பேர். இப்பாடத்தைக் கற்பதனால் Systematic Man ஆக வாழமுடியும் என்று கற்பவர்கள் எத்தனையோ எத்தனை பேர்கள். ஆனால் இன்று இப்பாடத்தை விரும்பிக் கற்பவர்கள் எத்தனை பேர்? இதில் உயர்புள்ளிகளைப் பெற்று 'A' தரத்தினைப் பெறுவோர் எத்தனை பேர்? இதற்குக் காரணங்கள் தான் என்ன?

ஏனைய பாடங்களைவிடப் புவியியல் பாடத்தில் உயர் புள்ளிகளைப் பெற்று 'A' தரத்தைப் பெறுவது மிகவும் இலகு என்றே கூறவேண்டும். எந்த ஒரு பாடமும் கடினமானதல்ல. விளங்காத வரையுந்தான் எப்பாடமும் கடினமாகத்தான் தோன்றுகின்றது. விளங்கி நன்கு கற்கும்போதும், அதனை ஒழுங்காக மனதில் இருத்தும்போதும், மனதில் இருத்தியவற்றை அடிக்கடி ஞாபகப்படுத்திப் பார்க்கும்போதும் எப்பாடத்திலும் 'A' தரத்தினைப் பெறுவது இலகுவிலும் இலகுவானதே.

### 'A' பெறமுடியாமைக்குக் காரணங்கள்

இந்தவகையிலேயே நாம் புவியியல் பாடத்தில் மிக மிக இலகுவாக 'A' தரத்தினைப் பெறுவது என்பது மிக எளிதே. எல்லாப் பாடங்களும் 100 புள்ளிகளுக்கோ அல்லது 200 புள்ளிகளுக்கோ வழங்கப்பட, புவியியல் பாடத்திற்கு மட்டும் 300 புள்ளிகளல்லவா வழங்கப்படுகிறது. இம் 300 புள்ளிகளும் 3 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டே வழங்கப்படுகின்றது. இம் 300 புள்ளிகளையோ அல்லது சற்றுக் குறைவாகவோ புள்ளிகளை இலகுவில் பெற்றுக்கொள்ள முடியும். பாடசாலைகளிலே உள்ள புவியியல் கற்பிக்கும் ஆசிரியர்களின் வழிகாட்டல்களில் மாணவர்களும், அவர்களது பெற்றோர்களும் வழிநடத்தப்படுவார்களாயில் 'A' தரத்தைப் பெறுவது மிக எளிதாகும். இன்று, அன்று போலன்றி மாணவர்கள் - ஆசிரியர்களை, அவர்களுடைய கற்பித்தலை - எடை போடுவதும், குறை கூறுவதும், தன் ஆசிரியரை நம்பாது தன் சக மாணவனை நம்பி பாடம் விட்டுப் பாடம் மாறுவதும், ஆசிரியரை மாற்றுவதும், மாணவரை நம்பிப் பெற்றோர் எடுபடுவதும் தொடர்ந்து இருக்கும் வரை புவியியல் பாடத்தில் மட்டுமென்ன? எந்த ஒரு பாடத்திலுமே உயர்புள்ளிகளை மாணவர் பெறமுடியாது என்பது உண்மையிலும் உண்மையாகும்.

புவியியல் பாடம் என்பது படவேலை (செய்முறைப் புவியியல்), சூழல் புவியியல், மானிடப் புவியியல் என 3 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இப்பாடம் மாணவர்களுக்குப் புதியதல்ல. தரம் 6 இல் ஏன் தரம் 3 இல் இருந்தே சூழல், சுற்றாடல் கல்வி என்ற அடிப்படையிலும் பின் சமூகக்கல்வி, புவியியல் என்ற அடிப்படையிலும் ஏற்கனவே கற்பிக்கப்பட்டு வரப்படுகின்றன. எனவே படித்ததைத்தான் மீண்டும் படிக்கப் போகின்றனர் மாணவர்கள். எனவே 'A' என்பது மிகவும் இலகுவாகும்.

### 'A' ஐப் பெற வழிமுறைகள்

இந்த வகையிலே எவ்வாறான வழி முறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலமும் (Technic) தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்துவதன்மூலம் உயர் புள்ளிகளைப் பெறலாம் என நோக்குவோம். முதலில் செய்முறைப் புவியியலிலே எப்படி இலகுவாக உயர் புள்ளிகளைப் பெறலாம் என நோக்குவோம்.

**புவியியல் I செய்முறைப் புவியியல்**

என்ற வினாப்பத்திரத்தை நோக்குவோமானால்

1. இது I - IV பகுதிகளைக் கொண்டது.
2. பகுதி I, II ஆகியவை தலா ஒவ்வொரு வினாக்களையும் பகுதி III, IV என்பவை தலா இரண்டு அல்லது 3 வினாக்களையும் கொண்டது.
3. பகுதி I இற்கு 60 புள்ளிகளும், ஏனையவைக்குத் தலா 20 புள்ளிகள் வீதமும் வழங்கப்படுகின்றன. மொத்தம் 100 புள்ளிகள்.

**பகுதி I வினா**


இது சமவுயரக் கோட்டுப் படவேலையாகும். இங்கு வினாக்கள் பின்வரும் முறைகளில் வினாவப்படுகின்றன. அவையாவன,

1. கட்டுரை அமைப்பில் வசனங்களைத் தந்து அதனை வாசித்துப் படம் வரைதல்.
2. வர்ணச் சமவுயரக் கோட்டுப் படங்களைத் தந்து அவற்றிலுள்ள வினாக்களுக்கு விடையளித்தல்.
3. குறிப்பிட்ட படங்களைப் பெருப்பித்து அல்லது சிறுப்பித்து வரைதல்.

இங்கு மாணவர்கள் அறிந்திருக்க வேண்டிய கடைப்பிடிக்க வேண்டிய முக்கியமான அம்சங்கள் என்னவெனில்,


A. சமவுயரக் கோட்டுப் படவேலை என்பது என்ன? இது ஏன்? எவ்வாறு வரையப்படுகின்றது என்பதனைத் தெளிவாக விளங்கி இருக்க வேண்டும்.

படம் 1





B. இதில் பின்பற்றப்படும் சகல அளவுத் திட்ட வகைகளும் - 5 உம் தெரிந்து, வரையத் தெரிந்திருக்க வேண்டும்.

படம் 2





C. தரைத்தோற்ற அனைத்து அம்சங்களையும் சமவுயரக் கோட்டு முறைகளில் வரையத் தெரிந்திருக்க வேண்டும்.

படம் 3




D. பொருத்தமான குறியீடுகளையும் அவற்றைப் மிகப்பொருத்தமான இடங்களில் சரியாக வரையத் தெரிந்திருக்க வேண்டும்.

படம் 4




உதாரணமாக, பாடசாலை, வைத்தியசாலை, பொலிஸ் நிலையத்துடன் கூடிய குடியிருப்பு ஒன்றை வரைய வேண்டின் தனியே இக்கட்டடங்கள் மட்டும் வரையக்கூடாது. அத்தோடு வீடுகளையும் சேர்த்து வரையவேண்டும். அடுத்துச் சந்திக் குடியிருப்பு எனின் சந்தியுடன் சேர்த்து வீதியின் அருகில் கரையோடு சேர்த்து வரையவேண்டும். அடுத்து, பொருத்தமான இடங்களில் பாடசாலை, வைத்தியசாலை போன்றவற்றை வரைய வேண்டும். (உ+ம்), நதிக்கருகிலோ, புகையிரத நிலையத்திற்கு அருகிலோ பாடசாலையை வரையக் கூடாது.

E. சமவுயரக்கோட்டுப்படங்களை நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும். அதன் உயர வேறுபாடுகள், வடிகால் அமைப்புக்கள் நிலப்பயன்பாடுகள் தரைத்தோற்ற அம்சங்கள் போன்ற சகலவற்றையும் நன்கு விளங்கிக் கொண்ட பின்பே கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

**பகுதி II வினா**

இது ஒரு வினாவையே கொண்டிருக்கும். கட்டாயம் செய்ய வேண்டியதாகும். இது உலகப்புற உருவப்படத்தில்,

A) இடங்களைக் குறிப்பது (நாடுகள், தலைநகரங்கள், ஆறுகள், மலைகள், பாலைநிலங்கள், சமவெளிகள், ஏரிகள், கடல்கள் போன்வற்றைக் குறிப்பது)
B) உலக விடயங்களை வினாக்களாக வினாவும்போது அவற்றை எங்குள்ளது எனக் குறித்துக் காட்ட வேண்டும்.

(உ+ம்) உலகக்கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டி இவ்வாண்டு நடைபெறவுள்ள இடம்.

எனவே - இங்கு மாணவர்கள் நாளாந்தம் பத்திரிகைகள், வானொலிகள், தொலைக்காட்சிகள், மற்றும் நாட்டு உலக விடயங்களைக் கேட்டு, பார்த்து பின் அவை எங்குள்ளன என்பதனை உலகப்படங்களில் உடனுக்குடன் தேடிப்பார்த்து தெரிந்துகொள்ளல் நாளாந்தம் வாழ்வில் அவசியமாகும். அவ்வாறாயின் 20 இடங்களுக்கும் 20 புள்ளிகளையோ அல்லது 15 புள்ளிகளையோ நிச்சயம் பெறமுடியும்.

**பகுதி III வினா**

இது இரு பகுதிகளைக் கொண்டது. இது இரு வினாக்களைக் கொண்டிருக்கும்.

1. (சங்கிலி நாடா) - நில அளவையியல்
2. எறியங்கள்.

**சங்கிலி நாடா - நில அளவையியல்**

இவற்றில் விரும்பிய ஏதாவது ஒரு வினாவுக்கு மட்டுமே விடையளிக்க வேண்டும்.

இது பற்றிய வினாக்கள்.

1. படங்களை வரையும்படியும்
2. நில அளவீட்டுக் கருவிகளை வரைய, குறிப்பிடவும்
3. நில அளவை பற்றிய வினாக்களுக்கு விடைகளை அளிக்கும் வகையிலும் வினாவப்படும்.


எனவே மாணவர்கள் - சங்கிலி நாடா அளவு முறைகள், கருவிகள், பயன்பாடுகள், ஏனைய அளவீட்டு முறைகளுக்கும் சங்கிலி நாடா அளவீட்டு முறைக்குமான வேறுபாடுகள், முக்கியத்துவங்கள் பற்றியும் அறிந்து வைத்திருத்தல் வேண்டும்.

**எறியங்கள்**

அனைத்து (13) எறியங்களையும் மாணவர்,

A. வரையும் முறை
B. இனங்காணும் முறை
C. எறியங்களின் பண்புகள், பயன்கள்
D. முக்கியத்துவங்கள்
E. இவற்றினுள் இடம்பெறும் நாடுகள்.

படம் 5




என்பன பற்றி நன்கு அறிந்திருக்க வேண்டும். இங்கு முக்கிய விடயம் வரையவும், வினாக்களுக்கு விடையளிக்கவும் அதாவது, இவை பற்றிய அடிப்படையான அம்சங்கள் பற்றியும் முக்கியத்துவங்கள் பற்றியும் தெரிந்திருக்க வேண்டும்.

**பகுதி IV வினா**

இது 1. பார் வரைபடங்கள்
2. பை/சில்லு/வட்ட வரைபடங்கள்
3. கோட்டு - நிரல் வரைபடங்கள்.
4. புள்ளிவிபரவியல் என்பன இடம்பெறுகின்றன.

இவற்றில் ஏதாவது ஒரு வினாவிற்கு மட்டுமே விடையளிகக் வேண்டும். அவ்வினாக்கள்.


A. வரையும்படி அல்லது
B. வரைபடங்களைத்தந்து வினாவிற்கு விடையளிக்கும் படியும். அல்லது
C. இவற்றின் பண்புகள், முக்கியத்துவங்கள் பற்றியும் வினாவப்படும். எனவே விடையளிக்க மாணவர்கள் தயாராக இருக்கவேண்டும்.

★ இங்கு மாணவர்கள் முக்கிய கவனம் செலுத்த வேண்டியது

I. முப்பரிமாணத்தன்மைகளில் வரைபடம்.
II. நன்கு கண்ணைக்கவரும் நிறங்களைப் பயன்படுத்தல்.
III. தெளிவும், கவர்ச்சியும், விளக்கங்களையும் கொண்டிருத்தல்
IV. துப்பரவு, தூய்மையாகப் படங்களை வரைய வேண்டும்.

உ+ம், பார் - சில்லு வரைபடங்களை வரைவதாயின் இவ்வாறு முப்பரிமாணத்தன்மைகளில் வரைதல் வேண்டும். இதனால் கூடிய அல்லது முழுப்புள்ளிகளையும் பெறமுடியும்.

படம் 6




**புள்ளிவிபரவியல்**

புள்ளிவிபரவியல் பற்றிய வினாவானது மிகவும் சுலபமானது. இதற்கெனப் புதிதாக ஒன்றும் கற்கத்தேவையில்லை. ஏனெனில், தரம் 10, 11 ஆம் வகுப்புக்களிலே கணித பாடத்தில் புள்ளிவிபரம் பற்றி மாணவர் கற்றிருப்பர். ஏனெனில், அவர்களுக்கு இது ஒரு பாடமாகும். இதில் இடை, இடையம், ஆகாரம், காலணைகள், சராசரிகள், விலகல் போன்வற்றை மாணவர் எல்லோருமே தெரிந்திருத்தல் அவசியமானது.

அவ்வாறாயின் 20 புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

***மாணவர்களது கவனத்திற்கு***

இவ்வாறான வழிமுறைகளை மட்டுமன்றி

1. சிறந்த கருவிகளைப் (பென்சில் - போனா, வர்ணப்பென்சில்கள் போன்றவற்றை)
2. விரைவாக வரைதல் (குறித்த நேரத்திற்குள்)
3. தெளிவாகவும், கவர்ச்சியாகவும், தூய்மை (துப்பரவு)யாகவும் வரைதல்
4. இலகுவானதும் நன்கு தெரிந்த வினாக்களையும் தெரிந்து விடை எழுதுதல்.
5. முழு வினாக்களுக்கும் (கேட்கப்பட்டவை) விடையளித்தல்.
6. எழுத்துக்கள், கோடுகள், என்பவற்றை கறுப்பு நிறங்களில் எழுதுதல் - இடுதல்.

இவற்றைவிட - மாணவர் தம்மிடைய தாம் "உயர்புள்ளிகளைப் பெறவேண்டும்" - "பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாக வேண்டும்" என்ற சிந்தனைகளுடன் மற்றும் அறிவிற்கும் - வாழ்விற்கும் ஏற்ற நோக்குடன் கற்றுக்கொள்ள வேண்டும்.

***பெற்றோரது கவனத்திற்கு***

இப்பாடம் அவசியமானது. இதற்குப் பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்குப் பேரூக்கம் அளிக்கவேண்டும். தம் பிள்ளைகளுக்கு இப்பாடத்தின் மூலமான வாழ்க்கைப் பயன்களையும், உயர்புள்ளிகளைப்பெறும் உத்திகளையும் எடுத்துரைக்க வேண்டும். இப்பாடம் சம்பந்தமான அறிவுரைகள், இது விடயமான நூல்கள், சஞ்சிகைகள், படங்கள் என்பவற்றைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். நல்ல ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் மேற்கொள்ளவேண்டும். தமது பிள்ளைகளுக்கு இப்பாடத்திலான விருப்புக்களை உண்டு பண்ணவேண்டும்.

***ஆசிரியர்களுக்கு***

எப்போதுமே ஆசிரியர்கள் தம்பணியைப் பொறுப்புடனும், சிரத்துடனும், மாணவர்கள் நலன்கருதியும் செயற்படுபவர்களாகவே விளங்கிவருகின்றனர். எனவேதான், இன்றும் என்றும் பல்கலைக்கழகங்களில் கற்கும் மாணவர்களின் தொகை வருடாவருடம் அதிகரித்துக்கொண்டே வருகின்றது. இதனைவிட வெளிவாரி மாணவர்களின் எண்ணிக்கைகளையும் கொண்டு ஆசிரியர்களது பணியின் சிறப்புக்களை உறுதிப்படுத்திக் கொள்ளமுடியும்.

இந்தவகையில் புவியியல் கற்பிக்கும் ஆசிரியர்கள் தாங்கள் மேற்கொள்ளும் சிறந்த பணிகளோடு மேலும் இவற்றையும் மேற்கொள்ளும்போது நிச்சயமாக இப்பாடத்தில் மாணவர்கள் 100% ஆன 'A' தரங்களைப் பெறவும் பல்கலைக்கழகம் புகவும இலகுவாகும்.

1. மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் இப்பாடம் சம்பந்தமான முக்கியத்துவங்கள், வாழ்வுப்பயன்களைத தெளிவுபடுத்தல்.
2. இப்பாடத்தின் இலகுத்தன்மைகள் பற்றியும் சிறு வகுப்பு முதல் பிடித்த பாடமே என்பதனையும் விளக்கித் தன்னம்பிக்கையை வளர்த்தல்.
3. மிக இலகுவாகவும், கவர்ச்சிகரமாகவும், இனிமையாகவும் கற்பித்தல்.
4. எல்லாவிதமான வினாக்களுக்கும் விடையளிக்கத்தக்கதாகவும் அதேவேளை தெரிவு அடிப்படையில் அன்றி முழுப்பகுதிகளையும் கற்று விடையளிக்க வைத்தல்.
5. கூடியளவு பயிற்சிகளில் - மீட்டல்களிலும் ஈடுபடச்செய்தல்.
6. மாணவர்களிடையே இப்பாடம் தொடர்பான ஒழுங்கமைப்பு, பற்றுதல், ஏற்றுக்கொள்ளுதல் போன்றவற்றை விடுத்தியடையச் செய்தல்.

இவ்வாறான வழிமுறைகளை மேற்கொள்ளும்போது வெகு இலகுவாகவும், அதேவேளை ஆர்வத்துடன் இப்பாடத்தில் உயர்புள்ளிகளை மாணவர்கள் பெறுவர். பல்கலைக்கழகங்களுக்குச் சென்று உயர்கல்வியையும் உயர் பட்டங்களையும் பெற்று உயர் பதவிகளை வகித்து எதிர்காலச் சமுதாயத்தை நல்வழிப்படுத்திச் செல்வர் என்பது உறுதி. எனவே அனைவருமே பொறுப்புடையவர்களாகச் செயற்பட்டு வெற்றிகள் பல பெறுவோம்.

எம். இக்னேசியஸ்
B.A. (Geo.) Hons, Dip. in Edu, S.L.E.A.S. - III
விரிவுரையாளர், பலாலி ஆசிரியர் கல்லூரி, திருநெல்வேலி.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

*ஒல்வது அறிவது அறிந்து அதன் கண்தங்கி*
*செல்வார்க்குச் செல்லாதது இல்.*
*- திருக்குறள்.*

# நமது நோக்கு

## உரக்கவே ஒலிக்கட்டும் எம் உணர்வு!

உயர் பாதுகாப்பு வலய விவகாரத்திற்குத் தனது தரப்பிலிருந்தான ஆலோசனைகளை முன்வைக்க முனைந்திருக்கும் இந்திய இராணுவத்தின் ஓய்வுபெற்ற உயரதிகாரி லெப்டினனட் ஜெனரல் சதீஸ் நம்பியார், இன்று யாழ். குடாநாட்டின் மக்கள் பிரதிநிதிகளை நேரடியாகச் சந்திப்பதற்காக யாழ்ப்பாணம் வரவிருப்பதாக அரசாங்கத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கு முன்னரும் சில தடவைகள் யாழ்ப்பாணம் வந்திருக்கும் சதீஸ் நம்பியார், கடந்த மாதம் அரசாங்கத்திற்குச் சமர்ப்பித்த தனது முதற்கட்ட அறிக்கையில் - முற்றுமுழுதாக இராணுவ நலன்களை முதன்மைப்படுத்தி, அதற்கு எவ்வகையிலும் பாதிப்பு ஏற்படுத்தக் கூடாது என்ற நிலையில் - மக்களின் மனிதாபிமானப் பிரச்சினை பற்றி எதுவித கருத்தும் கொள்ளாமலேயே 'சிந்தனைகளை' ஆலோசனைகளாக முன்வைத்திருந்தார்.

இந்த ஆலோசனைகள், உயர்பாதுகாப்பு வலயத்தினுள் தமது குடிமனைகளை, வாழ்வைத் தொலைத்து நிற்கும் இடம்பெயர்ந்த மக்களின் மீது எவ்விதத்திலும் கரிசனையோ, கவலையோ கொள்ளாமல் -

அதற்கு எவ்வகையிலும் தொடர்பற்றதாக - விடுதலைப் புலிகளின் ஆயுதங்களைக் களைவது பற்றியும், கனரக ஆயுத நிலைகளைப் பின்னகர்த்துவது தொடர்பாகவும் - 'மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடவே' முயன்றன.

சதீஸ் நம்பியாரின் - உயர்பாதுகாப்பு வலயம் பற்றிய இந்தப் பார்வையும் நிபந்தனைகளும் - விடுதலைப் புலிகளால் மிகக்கடுமையான விமர்சனத்துடன் நிராகரிக்கப்பட்டதோடல்லாமல்,

பொதுஜன அமைப்புக்களின் கோபத்தையும் கிளறுவதாகவே அமைந்தது.

அமைதியும் சமாதானமும் திரும்பிவிட்டது, எப்போது இனி நாம் எமது சொந்த வீடுகளுக்குத் திரும்புவோம் என ஆவலோடு காத்திருந்த மக்களின் எதிர்பார்ப்பில் மண் அள்ளிப் போடுவதாக நம்பியாரின் அறிக்கை இருந்ததைத் தமிழினம் ஒட்டுமொத்தமாக எதிர்த்தது.

நம்பியார் நம்பத் தகுந்தவராக இல்லை என்பதே தமிழ்மக்களின் முடிவானது.

இந்த ஒட்டுமொத்த எதிர்ப்பானது - அமைதி முயற்சிகளில் தீவிரமான தாக்கத்தை ஏற்படுத்திவிடும் என்ற உண்மையை உணர்ந்துகொண்ட அரசாங்கமும் - சதீஸ் நம்பியாரின் உயர் பாதுகாப்பு வலயம் பற்றிய ஆலோசனைகளை அதிகாரபூர்வமாக ஏற்றுக்கொள்ளவோ, அறிவிக்கவோ பின்னடித்தது.

ரணில் அரசாங்கத்தின் அமைச்சர் ராஜித சேனாரத்ன - நம்பியாரின் அறிக்கை அரசாங்கத்தின் அறிக்கையல்ல என்றும், அமைச்சர் மிலிந்த மொறகொட - பிரிட்டிஷ் நிபுணர் மைக்கல் றோஸின் - உயர் பாதுகாப்பு வலயம் பற்றிய அறிக்கையும் கிடைத்த பின்னரே இறுதிமுடிவு என்றும் அறிவிக்கவேண்டி வந்தது.

இந்த நிலையில் - தனது இறுதிக்கட்ட அறிக்கைக்காக - பொது அமைப்புக்களைச் சந்தித்துப் பேசவும், கருத்துக்களை அறியவும் நம்பியார் - இன்று யாழ். வருவார் என செய்திகள் வெளியாகியுள்ளன.

நம்பியாரின் இந்த விஜயமும் சந்திப்பும் - உயர் பாதுகாப்பு வலயம் பற்றிய அவரது முதல் அறிக்கையிலிருந்து எந்தவிதமான மாற்றங்களை ஏற்படுத்தும் என்பது சந்தேகமே. ஆனால், உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்களது மீள்குடியேற்றம் என்ற விவகாரத்தை - இராணுவ நலன் நோக்கில் இனியும் நகர்த்த முடியாதென்பதை அரசாங்கமும் அதன் வழியே நம்பியாரும் புரிந்திருக்கக்கூடும் எனச் சொல்ல முடியும்.

அதேவேளை - இன்று திட்டமிட்டபடியான சந்திப்பொன்று நடைபெறுமாயின் - தமிழினத்தின் ஒட்டுமொத்தக் குரலுமே மிகத் தெளிவாக நம்பியாருக்கு எடுத்துரைக்கப்படும்.

அவர் அதனை நடுநிலைமையுடன் உள்வாங்கிக் கொள்வாராயின் - தமிழ் மக்கள் தமது உரிமைகள் தொடர்பாக எத்தகைய உறுதியுடன் இருக்கின்றார்களென்ற தெளிவு, அவருக்கும் அதன்வழியே இந்திய அரசாங்கத்திற்கும் ஏற்படுத்தப்படலாம்.

ஆனால், கடந்த அனுபவங்கள் உண்மையை உள்வாங்கக்கூடியதாக இந்தியத் தரப்பு இல்லையென்பதையே எடுத்துக்காட்டியிருக்கின்றன.

எவ்வாறிருந்தாலும் - உயர் பாதுகாப்பு வலயம் என்ற பேரில் இனியும் தமிழினத்தின் அசைவியக்கத்தையும், சுதந்திரத்தையும் மட்டுப்படுத்திவிட முடியாது என்ற செய்தியும், அதனூடாக இராணுவப் பிரசன்னம் எம் மண்ணில் ஏற்படுத்தியுள்ள உணர்வலைகளும் மிக உறுதியாக வெளிப்படுத்தப்படவேண்டிய தேவை இன்றைய சந்திப்புக்கு அவசியமாகவுள்ளதை மனங்கொள்வோம்.

# இடம்பெயர்ந்த சிங்கள, முஸ்லிம் மக்கள் மீள்குடியமர தங்கள் பகுதிகளுக்கு விடுதலைப் புலிகள் அழைப்பு!

(கொழும்பு)

கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதிகளில் முன்னர் குடியமர்ந்த சிங்கள, முஸ்லிம் மக்கள் மீண்டும் வந்து குடியமர முடியும் என விடுதலைப் புலிகள் அழைத்துள்ளனர்.

- இவ்வாறு கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டிருந்தது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இதுவரை நூறு முஸ்லிம் குடும்பங்கள் மீள்குடியமர்ந்துள்ளன.

இம்மக்களது வீடுகள், நிலங்களில் தமிழ் மக்கள் குடியமர்ந்தால் - அவர்களை அவ்விடங்களைவிட்டு விலகுமாறு தமிழீழக் காவல்துறையினர் கேட்டுள்ளனர்.

மீள்குடியமரவரும் சிங்கள, முஸ்லிம் மக்கள் தமது காணிகளை, உரிய ஆவணங்களைக் காண்பிப்பதன்மூலம் மீண்டும் பெற்றுக்கொள்ள முடியும்.

அதேவேளை, முஸ்லிம் மதத் தலைவர்களின் வேண்டுகோளின்படி - விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் குடியமரும் முஸ்லிம் மக்கள், தமது மதத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு ஒரு பள்ளிவாசலை அமைக்கவும் அவர்கள் அனுமதி வழங்கியுள்ளனர் என்றும் அந்தக் கொழும்பு ஊடகம் மேலும் தெரிவித்தது.

# பாதுகாப்பு வலயம் பற்றிய முன்னைய நிலையை புறூவ் ஹொவ்டே - நம்பியாரிடம் வலியுறுத்து!

## யு.என்.எச்.சி.ஆர், ஐ.சி.ஆர்.சியுடன் சந்திப்புக்கள் நடந்தன

(கொழும்பு)

கொழும்பு வந்திருக்கும் ஓய்வுபெற்ற இந்திய இராணுவ உயரதிகாரி லெப்.ஜெனரல் சதீஸ் நம்பியார் - அங்கு, ஐ.நா. அகதிகள் உயர் ஸ்தானிகராலயப் பிரதிநிதிகளையும், போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளையும் நேற்றுமுன்தினம் சந்தித்தார்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஜெனரல் புறூவ் ஹொவ்டே - நம்பியாரைச் சந்தித்ததை உறுதிப்படுத்திய அக்குழுவின் பேச்சாளர் ரெய்ரூர் ரொகில்சன், உயர் பாதுகாப்பு வலயங்கள் பற்றிய தனது முந்தைய நிலைப்பாட்டையே ஹொவ்டே, நம்பியாரிடம் மீண்டும் வலியுறுத்தியதாகத் தெரிவித்தார். இரண்டு தரப்பினரதும் இராணுவச் சமநிலையானது - மீள்குடியமர்வுக்காகவும், விவசாயத் தேவைக்காகவும் உயர் பாதுகாப்பு வலயங்களில் மாற்றம் செய்வதன் மூலம் பாதிக்கப்படும் என ஹொவ்டே, நம்பியாரிடம் தெரிவித்தார்.

உயர் பாதுகாப்பு வலயத்தை அகற்றுவது படைச் சமநிலையைப் பாதிக்கும், படைச்சமநிலையின் அடிப்படையில் அமைந்த போர்நிறுத்தமும் அதனால் பாதிக்கப்படும். எனவே, மீள்குடியமர்வு கட்டங்கட்டமாகவும், கட்டுப்படுத்தப்பட்ட நிலையிலும் மேற்கொள்ளப்படவேண்டும் எனக் ஹொவ்டே மேலும் கூறியதாகவும் பேச்சாளர் ரெய்ரூர் ரொகில்சன் தெரிவித்தார்.

இதேவேளை, ஐ.நா அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயப் பிரதிநிதி நீல் ரைட், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் இலங்கைக்கான தலைமைப் பிரதிநிதி மார்கஸ் புருடர்மான் ஆகியோரையும் சதீஸ் நம்பியார் நேற்றுமுன்தினம் சந்தித்தார்.

# நம்பியாருக்காகக் காத்திருப்பதா? அரசே பதில் சொல்ல வேண்டும்!

## மாவை சேனாதிராஜா தெல்லிப்பளையில் கருத்து

வலி.வடக்கு மக்கள் மீளக் குடியமர்வதற்கு விரும்புகிறார்கள். அதே போன்றுதான் நானும் எனது பிரதேசத்தில் எனது சொந்த நிலத்தில் வாழவிரும்புகிறேன். எனவே, அதற்காக நாம் நம்பியாரின் பதிலுக்காகக் காத்திருக்க வேண்டிய தேவையில்லை. ஏனெனில், அவருடைய அறிக்கை முற்றிலும் இராணுவம் சம்பந்தப்பட்டதாகவே இருக்கும்.

எமக்கு மீளக்குடியமர்வு சம்பந்தமாக அரசாங்கமே பதில் சொல்ல வேண்டும். அரசாங்கத்தின் பதில் சாதகமாக அமையாவிடில் நாம் சில இழப்புக்கள் மூலம்தான் எமது பிரதேசத்தில் குடியமர வேண்டுமாயின் தந்தை செல்வா காட்டிய வழியில் அகிம்சைப் போராட்டத்தை ஆரம்பிப்பதற்கு நாம் பின்னிற்கக் கூடாது.

- என தெல்லிப்பளை காசிப்பிள்ளையார் கோயிலிற்கு அருகில் வலி.வடக்கு மக்களுடனான கலந்துரையாடல் ஒன்றை நடாத்திய யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில்,

மக்கள் மீளக்குடியமர்ந்தால்தான் சிதைந்த எமது பிரதேசத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யலாம். இல்லாவிடில் எவ்வித பிரயோசனமுமில்லை.

தற்போது தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி, யூனியன் கல்லூரி, தந்தை செல்வா ஆரம்பப் பாடசாலை மற்றும் புற்றுநோய் வைத்தியசாலை ஆகியவற்றைப் புனரமைப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மற்றும் சில சிறிய வேலைத் திட்டங்களுக்கு மட்டுமே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றார். (68)

# சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் திறன் விருத்திப் போட்டி முடிவுகள்

(நல்லூர்)

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அனுசரணையுடன் யாழ்.வலயத்திற்கான திறன் விருத்திப் போட்டி - 2003 இன் முடிவுகள் வெளியாகியுள்ளன.

*கீழ்ப்பிரிவு - பேச்சு*

1 ஆம் இடம் - சிவராஜா துசானி (யா/இந்து ஆரம்பப் பாடசாலை), 2 ஆம் இடம் - அருணாசலம் சஞ்ஜீபா (யா/ கொக்குவில் சி.சி.பாடசாலை), 3 ஆம் இடம் - இ.நிரோசனா (யா/நவக்கிரி அ.மி.த.க. பாடசாலை).

*பாட்டு* - 1 ஆம் இடம் - கேதீஸ்வரன் வர்சினி (தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி), 2 ஆம் இடம் - ஜெ.கேதாரணி (யா/நாவலர் தமிழ் வித்தியாலயம்), 3 ஆம் இடம் - செல்வரட்ணம் பிரவீணா (யா/ இந்து ஆரம்ப பாடசாலை).

*மத்திய பிரிவு - கட்டுரை*

1 ஆம் இடம் - சிந்துஜா யோகராஜா (யா/திருக்குடும்பக் கன்னியர்மடம்), 2 ஆம் இடம் - சிவநேசன் தரணீபன் (யா/ இந்துக்கல்லூரி), 3 ஆம் இடம் - சிறிதரன் குவலயா (யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை).

*கவியரங்கம் - (தனி)* - 1 ஆம் இடம் - சிவலிங்கம் கஜேந்தினி (யா/ இந்து மகளிர் கல்லூரி), 2 ஆம் இடம் - கருணாநிதி ரசிகோபாலன் (தாயகம் சிறுவர் இல்லம் கொக்குவில்), 3 ஆம் இடம் - இ.சஸ்மிதா (யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை).

*கவியரங்கம் (குழு)* - 1 ஆம் இடம் -பிரியகாந்தி குழுவினர் (வளர்மதி சிறுவர் கழகம் அச்சுவேலி).

*மேற்பிரிவு - கவியரங்கம் (தனி)*

1 ஆம் இடம் - சிவமகாலிங்கம் அருளினியன் (யா/ இந்துக்கல்லூரி), 2 ஆம் இடம் - பிரவீந்திரா யோசப் (புனித சம்பத்திரிசியார் கல்லூரி), 3 ஆம் இடம் - அன்ரனி மேரிசெலின் (யா/ மத்திய கல்லூரி).

*கவியரங்கம் (குழு)* - 1 ஆம் இடம் - துஸ்யந்தன் குழுவினர் (யா/ மத்திய கல்லூரி), 2 ஆம் இடம் - யாழினி குழுவினர் (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), 3 ஆம் இடம் - டெசியா குழுவினர் (யா/ திருக்குடும்பக் கன்னியர்மடம்).

*கட்டுரை* - 1 ஆம் இடம் - கல்பனா திருஞானசம்பந்தர் (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), 2 ஆம் இடம் - குமாரவடிவேல் குருபரன் (யா/ இந்துக் கல்லூரி), 3 ஆம் இடம் - றோபிகா கைலாயசிங்கம் (யா/ நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்). (57)

# கச்சதீவுக்கு ஏற்பாட்டுக்குழு

அடுத்த மாதம் நடைபெறவுள்ள கச்சதவு அந்தோனியார் திருவிழாவை முன்னிட்டு அங்கு மேற்கொள்ளப்படவேண்டிய ஆயத்தப் பணிகளை கவனிபபதற்காக - நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர், பங்குத்தந்தை மற்றும் ஆலய ஆர்வலர்கள் கொண்ட குழுவினர் நாளைமறுதினம் அங்கு செல்லவுள்ளனர்.

இதற்கான அனுமதியைக் கடற்படையினர் வழங்கியுள்ளதாகத் தெரியவருகிறது.

(113)

# ஆங்கிலம் கற்பித்தலில் மாற்றம் வருமா?

**ஓய்வுபெற்ற யாழ். இந்துக் கல்லூரி அதிபரான அ.பஞ்சலிங்கம்- பலாலி ஆசிரியர் கலாசாலை வருகை விரிவுரையாளராகவும், உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் வருகை விரிவுரையாளருமாகக் கடமையாற்றுகின்றார். யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத் தலைவராகவும், யாழ்ப்பாண றோட்டறிக் கழக தலைவராகவும் இருந்து வரும் இவர், இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்ப்பாண மாவட்ட அரசதரப்புப் பிரதிநிதியுமாக இருக்கிறார்.**

*ஆங்கிலத்தின் முக்கியத்துவம், அதனைப் பாடசாலைகளில் போதிப்பதற்கு எடுக்கும் முயற்சிகள், பதவிகளில் உள்ளவர்களின் அசமந்தப் போக்கு ஆகியவை பற்றி எடுத்துக் கூறுகின்றார்.*



**அ.பஞ்சலிங்கம்
முன்னாள் அதிபர்.**

இன்றைய உலகில் ஆங்கில மொழி ஒரு உன்னதமான நிலையிலுள்ளது. அது வணிகத்திற்குரிய மொழியாகவும், தகவல் தொழிநுட்பத்திற்குரிய மொழியாகவும் திகழ்கின்றது. மேலும் உலக மக்கள் தொகையில் நாலிலொரு பங்கினர் இம்மொழியறிவு உடையவர்களாகவும், இத்தொகை நாளுக்கு நாள் அதிகரிப்பதாகவும் கூறப்படுகின்றது. அத்துடன் உலகில் வெளியிடப்படும் நூல்களில் அரைப்பங்கு ஆங்கில மொழியிலேயே எழுதப்படுவதாகத் தகவல்கள் தருகின்றன. தொழிலுலகின் நுழைவாயிலாகத் தகவல் தொழிநுட்பத்துடன் ஆங்கிலமும் உள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. சர்வதேசத்திலும் பரந்துள்ள அறிவுச் செல்வத்தை ஈட்டுவதற்கு திறவுகோலாக அமைகின்ற பெருமை இம்மொழிக்கு மட்டுமே உண்டு.

ஆங்கிலமொழி முதன்மை பெறுவதற்கு உலக மயமாக்கலையும் (Globalization) ஒரு காரணமாகக் கூறலாம். உலக மயமாக்கலுக்கும், ஆங்கில மொழியின் பிரயோகத்திற்கும் ஒரு தொடர்புண்டு. உலகமயமாக்கல் தொடர்ந்து முன்னெடுக்கப்படுமேயல்லாது அது பின்னகரப் போவதில்லை. எனவே, ஆங்கிலத்தின் தேவை, பிரயோகம் என்பன அதிகரிக்கத்தான் செய்யும்.

ஆங்கிலமே சர்வதேசத் தொடர்பு மொழியாக அமைந்துள்ளமையால் தனியார்துறையில் அல்லது வெளிநாடுகளில் தொழில் வாய்ப்பினை பெறுவதாயின் ஆங்கில அறிவு கோரப்படுகின்றது. ஆனாலும், எமது பல்கலைக்கழகங்களிலிருந்து வெளிவரும் பட்டதாரிகள் ஆங்கிலத்தில் தொடர்பாடலில் ஈடுபட இயலாதவர்களாகவுள்ளனர். 17 வருடங்களைத் தங்கள் கல்விக்காகச் செலவழித்த பின் இந்நிலை காணப்படுகிறது. மேலும், இவர்கள் 10 ஆண்டு காலம்வரை ஆங்கிலத்தினை இரண்டாம் மொழியாகப் பாடசாலைகளில் கற்றுள்ளனர் என்பது அவதானிக்கத்தக்கது. இருந்தபோதிலும் ஒரு நல்ல அறிகுறியாக - அனைவராலும் ஆங்கிலமொழியின் முக்கியத்துவம் உணரப்படுகின்றது. ஆங்கில அறிவு இன்றேல் அது ஒருவரின் மனதில் தாழ்வுச் சிக்கலையும் ஒதுங்கி நடக்கின்ற தன்மையையும் உருவாக்குகின்றது.

அண்மையில் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட கல்விச் சீர்திருத்தங்களில் குறிப்பிடத்தக்க நல்ல அம்சங்கள் உண்டு. அவற்றில் ஒன்று ஆங்கிலமொழி சம்பந்தமானது. ஆனால், இது சம்பந்தமான முன்மொழிவு வாதப் பிரதிவாதங்களுக்கு உட்பட்டுள்ளது. இம்முன்மொழிவுகளில் ஒன்று ஆங்கில மூலக்கல்வி. இவற்றை எதிர்ப்பவர்கள் முன்வைக்கும் வாதமானது ஆங்கிலத் தேர்ச்சி உள்ளவர்கள் மேல்நிலை சமூகத்தினராகவும் (Elite), பிறர் கீழ்நிலை சமூகத்தினராகவும் பிரிவு ஏற்படுமென்பதாகும். ஆனால், இந்தப் பிரிவு ஏற்கனவே உண்டு. செல்வாக்குகள் உள்ளோரின் பிள்ளைகளும் (அரசியல்வாதிகள் உட்பட), செல்வம் படைத்தோரின் பிள்ளைகளும் தனியார் பாடசாலைகளிலும், சர்வதேசப் பாடசாலைகளிலும் ஆங்கிலமொழி மூலம் கல்வி கற்கின்றனர். அரசாங்கப் பாடசாலைகளில் கற்கும் மாணவர்களுக்கு இச்சந்தர்ப்பத்தை வழங்கத்தவறின் இந்தப் பிரிவு விரிந்து கொண்டே செல்லும். இதனை உணர்ந்துதான்போலும் கல்விச் சீர்திருத்தத்தில் ஆங்கில மொழிமூலக் கல்வி வலுவூட்டப்பட்டுள்ளது. இதன் ஒரு அங்கம்தான் தரம் 6 முதல் தரம் 11 வரையான வகுப்புக் களில் மூன்று பாடங்களை ஆங்கிலமொழி மூலம் கற்பிக்கலாம் என்ற அறிவித்தல். இச்சந்தர்ப்பத்தை எமது அதிபர்கள், கல்வி அலுவலர்கள் பயன்படுத்துவர்களா? தகவல் தொழில்நுட்பம் என்றவுடன் இலட்சக்கணக்கில் பணம் செவழித்து கணினிகளை வாங்கிப் பயன்படுத்துகின்றனர்.




ஆனால், தகவல் தொழில் நுட்பத்திற்குக் கூடப் பயன்படுத்தக்கூடிய ஆங்கிலமொழிக் கல்வியை பல ஆயிரக்கணக்கான (லட்சங்களல்ல) ரூபாய்க்களைக் கொண்டு சமூகத்திலுள்ள ஆளணியினரைக் கொண்டு இந்தச் செயற்பாட்டினை முன்னெடுக்கப் பின்னடிப்பது ஏனோ தெரியாது. உண்மையில் பெற்றோர் இம்மாற்றத்தை விரும்புகின்றனர். இதில் ஒரு சலுகையும் வழங்கப்படுவது இங்கே குறிப்பிடப்படவேண்டும். ஆங்கிலமொழியில் கற்கும் பாடங்களை மாணவர்கள் விரும்பின் தமிழ்/சிங்களமொழி மூலம் பரீட்சைக்கு எழுதலாம் என்பதாகும்.

தென்பகுதிப் பாடசாலைகள் இச்சந்தர்ப்பத்தினைப் பய படுத்த முன்னிற்கும் பொழுது வடபகுதிப் பாடசாலைகள் இவற்றில் பெரிதும் அக்கறைகாட்டாதிருப்பது எமது சமூகத்தினை பெரிதும் பாதிக்கும். இதன் பேறாக ஏற்கனவே தொழில்வாய்ப்பின்றி தவிக்கும் எம் இளைய சமுதாயம் மேலும் பின்னடையச் செய்யப்படும்.

1960 களிலிருந்து பாடசாலைகளில் ஆங்கிலமொழியின் தாக்கத்தினைப் பார்ப்போம். இக்காலப் பகுதியிற்தான் ஆங்கிலம் கற்பித்தல் மொழியாகவிருந்து இரண்டாம் மொழி என்ற அந்தஸ்த்துக்குத் தள்ளப்பட்டது. பல வகையான கற்பித்தல் முறைகளைப் புகுத்தி ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாகக் கற்பிக்க முனைந்தனர். ஆனாலும் க.பொ.த (சா/த) பெறுபேறுகளின் அடிப்படையில் நோக்கும் பொழுது தரவீழ்ச்சி தென்படுகின்றது. அகில இலங்கையிலும் 1994 இல் 40% ஆங்கிலத்தில் சித்தியடைந்த மாணவர்கள் 1997 இல் 21% மட்டுமே சித்தியெய்தினர். தொடர்ந்து இந்த மட்டத்திலேயே பெறுபேறுகள் உள்ளன. தேசியக் கல்வி நிறுவனம் பல்வேறு கற்பித்தல் முறைகளை ஆங்கில நாட்டு வல்லுநர்கள் மூலம் காலத்திற்கு காலம் புகுத்தி எமது மாணவர்களில் பரிசோதனை நடாத்தியது. ஆனால் எவையுமே வெற்றியளிக்கவில்லை. இந்த வல்லுநர்கள் சில வகுப்புக்களில் கற்பித்துப் பார்த்தார்கள். பயனளிக்கவில்லை. அவர்கள் ஒன்றை மறந்துவிட்டார்கள். எமது பெரும்பான்மையான பிள்ளைகள் சுதேச மொழியான தமிழ்/சிங்களத்தினை பின்னணியாகக் கொண்டவர்கள். அவர்களுக்கு ஆங்கிலமென்பது 40 நிமிட வகுப்பறைக் கற்பித்தல். அதனைச் சில பயிற்சிக் கல்லூரிகள் கண்மூடித்தனமாக முழுக்க முழுக்க ஆங்கிலமொழி மூலம் கற்பிக்க முனைவது அறிவிற்கு அப்பாற்பட்டதாகத் தெரிகின்றது.

நிறைவாகக் கூறக்கூடியது, கடந்த 40 ஆண்டுகளாக எமது நாட்டின் ஆங்கிலமொழியினை ஒரு இரண்டாம் மொழியாகக் கற்பிக்க எடு[illegible] முயற்சிகள் யாவும் தோல்வியிலே[illegible] முடிந்தன. இத்தோல்விகளுக்குப் பொறுப்பானவர்கள் கூறும் நொண்டிச்சாட்டு போதிய பயிற்சியுள்ள ஆங்கில ஆசிரியர்கள் இல்லாமையே என்பதாகும். ஆனாலும், சிறந்த பயிற்சியினைப் பெற்ற ஆசிரியர்கள் நல்ல பெறுபேற்றினைப் பெற்றுள்ளனரா? இல்லை. ஆங்கிலத் தர வீழ்ச்சிக்கான காரணம் மாணவர்கள் தாம் வகுப்பில் கற்றவற்றை பிரயோகிப்பதற்குச் சந்தர்ப்பம் கிடையாமையாகும். இதனை நிவர்த்திக்கும் நோக்கிலேயே கல்விச் சீர்திருத்தத்தில் ஆங்கில மொழிக் கற்பித்தல், மூன்று பாடங்களை ஆங்கிலமொழியில் கற்பித்தல் போன்ற அம்சங்கள் முன்மொழியப்பட்டு நடைமுறைப்படுத்த முயல்கின்றனர். இச்சந்தர்ப்பத்தினை எமது சமுதாயம் நழுவவிடாது என நம்பலாமா?




நமது ஈழநாடு வழங்கும்



# உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

MEGA பரிசுப் போட்டி

முதற்பரிசு - 25,000

வழங்குவோர்: **சுசுகி றேடர்ஸ்**

[இரத்தின கோபால்ஸின் இணைந்த நிறுவனம்]

59,61 கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

TVS மோட்டார் சைக்கிளின் யாழ்ப்பாண விற்பனை முகவர்.

இரண்டாம் பரிசு - 15,000

மூன்றாம் பரிசு - 10,000



வழங்குவோர்: **சந்தியா மல்ரிகோட்யாட்**

531, பருத்தித்துறை வீதி, நல்லூர்,

பிரதான வீதி, பண்டத்தரிப்பு

Fancy goods, gift items, fevicryl & acron paint items.

**இன்னும் ஏராளமான ஆறுதல் பரிசுகள்! வினாக்கொத்துக்கு விடை தந்து பரிசுகளை அள்ளிச் செல்லுங்கள்!!**

## உலகக் கிண்ண கிரிக்கெட் - 2003

**வெல்லுங்கள்...! அள்ளுங்கள்...!**

உலகக் கிண்ணக் கிரிக்கெட் பற்றிய வினாக்களுக்கு விடை தந்து பணப்பரிசுகளை, வெகுமதிகளை உங்களதாக்குங்கள்.

1. உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி 1975 இல் முதன் முதலாக எந்த நாட்டில் நடைபெற்றது? (....................)
2. இரண்டு முறை தொடர்ச்சியாக உலகக் கிண்ணத்தை வென்று மூன்றாவது முறையாக வெல்லும் வாய்ப்பை இழந்த அணி எது? (....................)
3. 2003 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகள் எந்தெந்த நாடுகளில் நடைபெறப்போகின்றன? (....................)
4. 2003 உலகக் கிண்ணப் போட்டிகளில் ஆட்டத்தொடர் நாயகனாக (MAN OF THE SERIES) விளங்கப்போகும் வீரன் யார்? (....................)
5. 2003 உலகக் கிண்ணத்தை வெற்றி கொள்ளப்போகும் அணி யாது? (....................)

பூர்த்தி செய்துவிட்டீர்களா...? இது போன்ற ஐந்து கூப்பன்களை ஒரே வகையில் பூர்த்தி செய்து, எதிர்வரும் மார்ச் 06 ஆம் திகதிக்கு முன்பாக -

'உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003'

'உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003'
நமது ஈழநாடு,
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்குத் தபாலிலோ, நேரிலோ அனுப்பி வையுங்கள்.

பெயர்: ------------------------------


வயது: ------------------------------

முகவரி: ------------------------------

------------------------------


*சரியான விடைகளை எழுதுபவர்களிலிருந்து அதிர்ஷ்டசாலிகள் தேர்ந்தெடுக்கப்படுவர்.*

*போட்டி முடிவுகள் மார்ச் 28 ஆம் திகதியன்று 'நமது ஈழநாடு' பத்திரிகையில் வெளியாகும்.*



# ஐ.சி.சி. உலகக் கிண்ணம் - 2003







### நஸார் ஹுசைன் (அணித்தலைவர்)

*பிறந்தது* - 28.03.1968 சென்னை (தமிழ்நாடு)
*அணிகள்* - எசெக்ஸ், இங்கிலாந்து.
வலதுகைத் துடுப்பாட்ட வீரர்.
**LEG BREAK** பந்து வீச்சு.
*டெஸ்ட் அறிமுகம்* -
எதிர் மே.இந்தியா 89/90 கிங்ஸ்டன் (ஜமெய்க்கா)
*ஒருநாள் அறிமுகம்* -
எதிர் பாகிஸ்தான் 89/90 (இந்தியா)

டெஸ்ட்- 81, ஓட்டங்கள் 4866, கூடியது 207, சதம் 12, அரைச்சதம் 27. ஒருநாள் சர்வதேச ஆட்டம்- 84, ஓட்டங்கள் 2308, கூடியது 115, சதம் 1, அரைச்சதம் 16. மிகவும் தளர்ந்து போயிருந்த இங்கிலாந்து அணியை நல்லநிலைக்கு உயர்த்தியவர். ஏற்ற இறக்கங்கள் இவருக்குப் புதியதல்ல. ஆனால் திறமை விஞ்சி நின்றது. அணியை ஐக்கியமாகவும் கட்டுக்கோப்புக்குள் கொண்டு வந்தது இவரது திறமையாகக் கருதப்படுகிறது.

### ஜேம்ஸ் மைக்கல் அன்டர்சன்



*பிறந்தது* - 30.07.1982 லங்காஷயர்.
*அணிகள்*- லங்காஷயர் **C.B**, இங்கிலாந்து.
இடதுகைத் துடுப்பாட்ட வீரர்.
வலதுகை மிதவேகப்பந்து வீச்சாளர்.
*ஒருநாள் அறிமுகம்* -
எதிர் அவுஸ்ரேலியா 2002/03

ஜிம்மி அன்டர்சன் அணிக்குப் புதியவர். 9 ஒருநாள் சர்வசே ஆட்டங்கள் மட்டும் விளையாடியவர். கவுன்ட்ரி அணியில் நன்கு விளையாடியவர். தாயக அணியின் நிரந்தர பந்து வீச்சாளர்களின் காயங்கள் காரணமாக அணிக்குள் வந்தவர். வேகப்பந்து வீச்சாளராக விளங்கி வருபவர். **VB** தொடர் பங்கேற்பு இவருக்கு அக்கினிப் பிரவேசம். எதிர்கால நம்பிக்கைக்கு உரியவர்.



### இயன் டேவிட் பிளக்வெல்

*பிறந்தது* - 10.06.1978 டார்பிஷயர்.
*அணிகள்* - டார்பிஷயர், சமர்செட், இங்கிலாந்து
இடதுகைத் துடுப்பாட்ட வீரர்.
இடதுகை மெதுவான **ORTHODOX**
*ஒருநாள் அறிமுகம்* -
எதிர் சிம்பாப்வே 2002/03 (கொழும்பு)

ஒருநாள் ஆட்டங்கள்- 12, மிக ஆக்ரோஷமாக ஆடுபவர், முதற்தர ஆட்டங்களில் 8 சதங்கள், 12 அரைச்சதங்களுக்கு உரியவர். காயமடைந்த அன்ட்ரூ பிளின்டோவ்க்கு பதிலாக அணியில் இணைக்கப்பட்டவர். **(ICC)** சமர்செட்டுக்காக விளையாடிய விவியன் றிச்சட்ஸ், இயன் போத்தம் வரிசையில் சமர்செட் மக்களால் நேசிக்கப்படுபவர்.

### அன்ட்ரூ றிச்சட் கெடிக்



*பிறந்தது* - 21.11.1968 நியூசிலாந்து
*அணிகள்*- சமர்செட், இங்கிலாந்து
வலதுகைத் துடுப்பாட்டம்
வலதுகை **FAST MEDIUM**
*டெஸ்ட் அறிமுகம்* -
எதிர் அவுஸ்திரேலியா 1993.
*ஒருநாள் அறிமுகம்* -
எதிர் அவுஸ்திரேலியா 1993.

பந்துவீச்சுத் திறமையில் அறியப்பட்டவர். 2001 இல் "விஸ்டன்" கிரிக்கெட் வீரர். டெஸ்ட்- 62, 234 விக்கெட், ஒருநாள் சர்வதேசப் போட்டிகள் - 49, 61 விக்கெட்டுக்கள், 1988 இல் இங்கிலாந்தில் குடியேறுகிறார். லாரா சாதனையாக 375 பெற்றபோது கெடிக்கின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். மனந் தளராமல் பந்துவீசுபவர். இங்கிலாந்து அணியின் பல மீட்சிகளுக்கு தன் பந்து வீச்சால் காரணமாக அமைந்தவர். பல துடுப்பாட்ட வீரர்களுக்கு அதிர்ச்சி வைத்தியம் அளிப்பவர்.

### போல் டேவிட் கொலிங்வூட்



*பிறந்தது* - 26.5.1976 இங்கிலாந்து
*அணிகள்* - டர்ஹம், இங்கிலாந்து
வலதுகைத் துடுப்பாட்ட வீரர்
**OFF BREAK** மற்றும் மிதவேகப் பந்து வீச்சு
*ஒருநாள் அறிமுகம்*-
எதிர் பாகிஸ்தான் 2001

ஒருநாள் சர்வதேசப் போட்டிகள்-33, 737 ஓட்டங்கள், மத்திய வரிசைத் துடுப்பாளர். சகலதுறை விளையாட்டு வீரராக வளர்ந்து வருபவர். உபாதைகள் தொடர்ந்து விளையாடும் சந்தர்ப்பங்களை இழப்பவர். உலகக் கிண்ணப் போட்டிகளில் தன்னை நிரூபிக்க வேண்டும்.

## நாளும் ஒரு வினா

உலகக் கிண்ணப் போட்டிகளில் தலா மூன்று சதங்கள் போட்ட வீரர்கள் யார்?

விவியன் றிச்சட்ஸ், றமீஸ் ராஜா, சச்சின், மார்க் வோ



### அன்ட்ரு பிளிண்டோவ்

*பிறந்தது*- 6.12.1977 லங்காஷயர்
*அணிகள்*- லங்காஷயர், இங்கிலாந்து
வலதுகைத் துடுப்பாட்ட வீரர்.
வலதுகை மிதவேகப் பந்துவீச்சு.
*டெஸ்ட் அறிமுகம்*-
எதிர் தெ.ஆபிரிக்கா 1998 (நொட்டிங்கம்)
*ஒருநாள் அறிமுகம்*-
எதிர் பாகிஸ்தான் 98/99 (சார்ஜா)

சிக்கனமான பந்துவீச்சு, அதிரடித் துடுப்பாட்டம், கவுண்டி அணிப் போட்டியில் 66 பந்துகளில் 143 ஓட்டங்கள். மற்றும் 160, 111 இரண்டும் வேகமான சதங்கள். தொடர் உபாதைகளால் (இன்று வரை) எதிர்காலம் கேள்விக்குறி (நிரந்தர நாரி வருத்தம்). சந்தர்ப்பம் சரியாக அமைந்தால் வேகமான ரன் சேகரிப்பு, துரிதமான விக்கெட் சாய்த்தல், தாயகத்தின் முதல் தர சகலதுறை வீரர்.

### ஆஷ்லி பிரேஸர் கைல்ஸ்



*பிறந்தது* - 19.03.1973, சர்ரே.
*அணிகள்*- வோரிக்ஷயர், இங்கிலாந்து
வலதுகைத் துடுப்பாட்டம்.
இடதுகை மெதுவான **ORTHODOX.**
*டெஸ்ட் அறிமுகம்*-
எதிர் தெ.ஆபிரிக்கா 98 (மான்செஸ்ரர்)
*ஒருநாள் அறிமுகம்*-
எதிர் அவுஸ்திரேலியா 97 (ஓவல்).

டெஸ்ட்-19, 55 விக்கெட், ஒருநாள் சர்வதேசப் போட்டி- 22, 22 விக்கெட். இங்கிலாந்தின் முதல்தர சுழல்பந்து வீச்சாளர். சிறு வயதில் வேகப் பந்து வீச்சாளனாக ஆரம்பித்து உபாதைகளால் சுழற் பந்து வீச்சாளராக 2000 இல் பாகிஸ்தானுக்கு எதிரான சுற்றுப் பயணத்தில் தன் இடத்தை உறுதிப்படுத்திக் கொண்டவர். துரதிர்ஷ்டம்- உடல் உபாதைகள், காயங்கள்.

### ஸ்ரீபன் ஜேம்ஸ் ஹேர்மிசன்

*பிறந்தது* - 23.10.1978, நோதம்பர்லண்ட்.
*அணிகள்* - டர்கம், இங்கிலாந்து.
வலதுகைத் துடுப்பாட்டம்.
வலதுகை வேகப் பந்துவீச்சு.






*டெஸ்ட் அறிமுகம்* -
எதிர் இந்தியா 2002 (நொட்டிங்கம்)
*ஒருநாள் அறிமுகம்* -
எதிர் இலங்கை 2002/03 (அடிலெய்ட்)

இவருக்கும் நாரி உபாதை. வேகமாக சாதனை புரியக் கூடிய வேகப் பந்துவீச்சாளர். ஆரம்பக் கட்டங்களில் பதகளிப்புக்கு உள்ளானவர். மெதுமெதுவாக தன்னை நிதானப்படுத்திக்கொண்டு வருபவர்.

### மத்தியூ ஜேம்ஸ் ஹொகார்ட்



*பிறந்தது*- 31.12.1976, யோர்க்ஷயர்.
*அணிகள்*- யோர்க்ஷயர், இங்கிலாந்து.
வலதுகைத் துடுப்பாட்டம்.
வலதுகை மிதவேகம்.
*டெஸ்ட் அறிமுகம்* -
எதிர் மே.இ.2000 (லோர்ட்ஸ்).
*ஒருநாள் அறிமுகம்*
எதிர் சிம்பாப்வே 2001/02 (ஹராரே).

டெஸ்ட்- 18, 66 விக்கெட், திறமை 7/63, ஒருநாள் போட்டி-20, 27 விக்கெட், திறமை 5/49. டெஸ்ட் அணிகளுடன் இணைந்து சென்ற அனுபவங்கள் அதிகம். விளையாடியதை விட 2001 இல் உபாதையால் ஒதுங்கினார். 2002 இல் எல்லா ஆட்டங்களிலும் பங்கு கொண்டார். **ECB** யால் ஒரு வருடம் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளமை இவரது திறமைக்குப் பரிசு.



### றொனால்ட் சார்லஸ் இரானி

*பிறந்தது* - 20.10.1971, லங்காஷயர்.
*அணிகள்* - லங்காஷயர், எசெக்ஸ், இங்கிலாந்து.
வலதுகைத் துடுப்பாட்டம்.
வலதுகை மிதவேகம்.
*டெஸ்ட் அறிமுகம்* -
எதிர் இந்தியா 96 (பர்மிங்காம்)
*ஒருநாள் அறிமுகம்* -
எதிர் இந்தியா 96 (ஓவல்)

ஒருநாள் சர்வதேசப் போட்டிகள்- 29, ரன் 348, விக்கெட் 21, திறமை 5/26. ஏற்ற இறக்கங்களுக்கு முகம் கொடுத்தவர். சிறந்த சகல துறை ஆட்டக்காரர். எதிர்காலத்தில் உயர் தகைமை பெறுவார் என்று எதிர்பார்க்கப்படுபவர். **VB** தொடரில் பங்குபற்றுவதற்காகச் சிறப்பாகத் தெரிவு செய்யப்பட்டவர். தன்னம்பிக்கையும் உறுதியும்கொண்ட வீரர்.



### நிக்கலஸ் வெரிட்டி நைட் (நிக் நைட்)

*பிறந்தது* - 28.11.1969, இங்கிலாந்து.
*அணிகள்*- எசெக்ஸ், வோரிக்ஷயர், இங்கிலாந்து.
இடதுகைத் துடுப்பாட்டம்.
வலதுகை மிதவேகம்.
*டெஸ்ட் அறிமுகம்* -
எதிர் மே.இ.95 (மான்செஸ்ரர்).
*ஒருநாள் அறிமுகம்* -
எதிர் பாகிஸ்தான் 96 (மான்செஸ்ரர்).

டெஸ்ட்- 17, ஓட்டங்கள் 719, கூடிய ஓட்டம்- 113,ஒருநாள் ஆட்டம்- 95, ஓட்டங்கள் 3534, கூடிய ஓட்டம் 125 , 5 சதம் 24 அரைச்சதம்.

ஏற்ற இறக்கங்கள், அணியின் நிரந்தர இடத்திற்கு போராட்டம். 2001 இல் இருந்து ஒரு நாள் அணியின் தவிர்க்க முடியாத வீரர். சிம்பாப்வேத் தொடரில் ஒரு நாள் ஆட்டத் தொடர் நாயகன்.

### அலெக் ஜேம்ஸ் ஸ்ருவட் (அலெக் ஸ்ருவட்)



*பிறந்தது* - 8.4.1963, சர்ரே.
*அணிகள* - சர்ரே, இங்கிலாந்து.
வலதுகைத் துடுப்பாட்டம், பந்துவீச்சு.
விக்கெட் காப்பாளர்.
*டெஸ்ட் அறிமுகம்* -
எதிர் மே.இ 89/90 (ஜமெய்க்கா).
*ஒருநாள் அறிமுகம்* -
எதிர் இலங்கை 89/90 (டெல்கி).

அனுபவம் நிறைந்த மூத்த **MBE** கௌரவம் பெற்ற வீரர். டெஸ்ட்களில் 8187 ரன்கள் (15 சதம், 43 அரைச்சதம், 247 பிடிகள்). ஒருநாள் சர்வதேசப் போட்டிகள்- 165, ரன் 4541, 153 பிடிகள். நிறைய ஆட்டங்களில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர். இம்முறை, இவருடைய கிரிக்கெட் வாழ்க்கையின் இறுதி சுற்றுப் போட்டியாக அமையலாம். தன் பணியை நிறைவாகச் செய்த அற்புதமான வீரர்.

### மார்கஸ் எட்வேட் டிரெஸ்கொதிக்

*பிறந்தது* - 25.12.1975, சமர்செட்.
*அணிகள்*- சமர்செட், இங்கிலாந்து.



இடதுகை துடுப்பாட்டம்.
வலதுகை மிதவேகப் பந்துவீச்சு.
*டெஸ்ட் அறிமுகம்*-
எதிர் மே.இ.2000 (மான் செஸ்ரர்).
*ஒருநாள் அறிமுகம்*-
எதிர் சிம்பாப்வே 2000 (ஓவல்).

மிகச் சிறந்த அதிரடி வீரர். அறிமுகம் அவசியமில்லை. அணித் தலைவராகும் வாய்ப்புக்களும் இல்லாமலில்லை. முதற்தர ஆட்டங்களில் 10 வருட கால அனுபவம். எந்தப் பந்து வீச்சாளரையும் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் ஆற்றல். எதிரணித் தலைவர் பந்து வீச்சாளரை மாற்ற வைப்பவர். சர்வதேச ஒருநாள் போட்டி- 56, 2045 ஓட்டங்கள், கூடிய ஓட்டம் 137, சதம் 4, அரைச்சதம 11. உலகக் கிண்ணத்தில் மனதில் பதியும்படி ஆடுவார்.இவர் இல்லாமல் இங்கிலாந்து அணியில்லை.


### மைக்கல் போல் வகன்



*பிறந்தது*- 29.10.1974, லங்காஷயர்.
*அணிகள்*- யோர்க்ஷயர், இங்கிலாந்து.
வலதுகைத் துடுப்பாட்ட வீரர்.
வலதுகை **OFF BREAK.**
*டெஸ்ட் அறிமுகம*-
எதிர் தெ.ஆ.99/2000 (ஜொஹனர்ஸ்பேர்க்)
*ஒரு நாள் அறிமுகம*-
எதிர் இலங்கை 2000/01 (தம்புள்ள)

மிகப் பரபரப்பாக பேசப்படுபவர். பந்து வீச்சாளர்கள் இவருக்குப் பந்து வீசத் தயங்குவர். மக்ராவுக்கு இவரின் இலக்கை வீழ்த்துவதே தவம். இங்கிலாந்து அணி ஆஷஸ் தொடரில் தாழ் நிலைக்குச் சென்று கொண்டிருக்க வகன் சதங்கள் குவித்துக் கொண்டிருந்தவர். உலகக் கிண்ணப் போட்டிகளில் எதிர் பார்க்கப்படும் வீரர்களுள் ஒருவர். டெஸ்ட்- 28, 8 சதம், 5 அரைச்சதங்கள் எனக் குவித்தவர். இங்கிலாந்து அணியின் நம்பிக்கைக்குரிய வீரர்.

### கிரெய்க் வைட்



*பிறந்தது* - 16.12.1969, யோர்க்ஷயர்.
*அணிகள்*- யோர்க்ஷயர், இங்கிலாந்து.
வலதுகைத் துடுப்பாட்ட வீரர்.
வலதுகை மிதவேகம், **OFF BREAK.**
*டெஸ்ட் அறிமுகம்* -
எதிர் நியூசிலாந்து 94 (நொட்டிங்காம்).
*ஒருநாள் அறிமுகம்* -
எதிர் அவுஸ்திரேலியா 94/95 (சிட்னி).

இங்கிலாந்தில் பிறந்து அவுஸ்திரேலியாவில் வளர்ந்தவர். இவரும் உபாதைகள், காயங்களால் பாதிக்கப்பட்டவர். ஆனால், சகலதுறை ஆட்டக்காரராக தன்னை நிலைப்படுத்திக் கொண்டவர்.
டெஸ்ட்- 30, ரன்கள் 1052, 1 சதம், 5 அரைச்சதம், 59 விக்கெட்டுக்கள்.
ஒருநாள் போட்டி-46, 489 ரன்கள், 56 விக்கெட்டுக்கள்.
சிறந்த களத்தடுப்பாளர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# ஜப்பான் ஹகோன் நகரில் அடுத்தகட்ட அமைதிப் பேச்சு

## மார்ச் 18 முதல் 21 வரையென அந்நாட்டு அரசு அறிவிப்பு

(ரோக்கியோ)

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான ஆறாவது கட்ட சமாதானப் பேச்சுவார்த்தை, மார்ச் மாதம் 18 ஆம் திகதியிலிருந்து 21 ஆம் திகதி வரை நான்கு நாட்களுக்கு ஜப்பானில் நடக்கவிருப்பதாக, அந்நாட்டு வெளிவிவகார அமைச்சு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

ரோக்கியோவிலிருந்து 70 கிலோ மீற்றர்கள் மேற்கேயுள்ள ஹகோன் (HAKONE) என்னும் ஓய்வுஸ்தலமான நகரிலேயே பேச்சுக்கள் நடக்கவிருப்பதாக, ஜப்பானிய வெளிவிவகார அமைச்சு மேலும் தெரிவித்தது.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் பாரிய கூட்டமொன்றும் வரும் ஜூன் மாதம் ரோக்கியோவில் நடைபெறவிருப்பது தெரிந்ததே.

# சில்லறை விற்பனைக் கடைகளில் இனி பெறுமதிசேர் வரி இல்லை

## நிதியமைச்சர் சொக்ஸி அறிவிப்பு

சில்லறை விற்பனைக் கடைகளில் பெறுமதிசேர் வரி அறவிடுவதை இடைநிறுத்துவது என்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

வாழ்க்கைச்செலவினைக் கவனத்தில் எடுத்து, இதை இடைநிறுத்துவது எனத் தீர்மானித்திருப்பதாக நிதி அமைச்சர் கே.என்.சொக்ஸி தெரிவித்துள்ளார்.

அத்தியாவசியப் பொருட்கள் சிலவற்றின் விலைகளைக் குறைப்பது பற்றியும் அரசாங்கம் கவனம் செலுத்துகின்றது. பெறுமதிசேர் வரி அறவிடப்படுவதால் பொருட்களின் விலை அதிகரிக்கும். எனவே, அதை இடைநிறுத்த அரசு தீர்மானித்ததாக அமைச்சர் சொக்ஸி மேலும் தெரிவித்தார்.

# 80 இலட்சம் சுவரொட்டிகள் ஒட்டி 541 பேரே படையில் சேர்ந்தனர்!

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட்டதன் பின்னர், படைகளுக்கு ஆட்களைத் திரட்ட மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிவடைந்துள்ளன. ஆனால், விடுதலைப் புலிகள் இதே காலப் பகுதியில் சுமார் இருபதாயிரம் உறுப்பினர்களை தமது இயக்கத்தில் இணைத்துக்கொண்டுள்ளனர். இவ்வாறு பொதுஜன ஐக்கிய முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

திகாமடுவவில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான விமலவீரவன்ச திஸநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசும்போது, படைகளுக்கு ஆட்களைத் திரட்டுவதற்காக அரசு பெருமளவில் பிரசாரம் செய்தது. இதன் ஒரு கட்டமாக 80 லட்சம் சுவரொட்டிகள் பயன்படுத்தப்பட்டன. எனினும், 541 பேர் மட்டுமே படையில் இணைந்துகொள்ள முன்வந்துள்ளனர்.

தற்போதைய சமாதான காலத்தைப் பயன்படுத்தி, விடுதலைப் புலிகள் வெளிநாடுகளில் இருந்து பெருந்தொகையான ஆயுதங்களை வன்னிப் பகுதிக்கு கப்பல்கள் மூலமாக எடுத்துச்சென்றுள்ளனர்.

சுமார் 27 கப்பல்களில் அவர்கள் ஆயுதங்களை எடுத்துவந்துள்ளதாக தமக்குக் கிடைக்கும் தகவல்கள் தெரிவிப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (01)

## தெல்லிப்பளையில் கும்பாபிஷேக தினம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை குருக்கள் கிணற்றடி விநாயகர் ஆலய கும்பாபிஷேக தினமும் மணவாளக்கோல விழாவும் இன்று நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு சங்காபிஷேகம் ஆரம்பமாகி பூசைகள் நடைபெற்று, விநாயகப் பெருமான் வீதி உலா வரவுள்ளார்.

## வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி

(ஊரெழு)

புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை அதிபர் சி.மணியம் தலைமையில் நடைபெறவுள்ளது. (96)

### பாதுகாப்பு வலயத்தில்....

பற்றித் தங்கள் கட்சியின் கவலைகளை இந்திய அரசாங்கத்திடம் பகிர்ந்து கொள்ளவே டெல்கி வந்திருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்திய அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் இந்தியா சென்ற அவர், முன்னாள் பிரதமர் குஜ்ரால், வெளி விவகார அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹா ஆகியோரைச் சந்தித்த பின்பு மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போதைய சமாதான நடவடிக்கையை அதிபர் சந்திரிகாதான் முதன்முதலில் தொடங்கி வைத்தார். அந்த அடிப்படையில் இந்த சமாதான நடவடிக்கைகள் வெற்றிபெற வேண்டும். இந்தியாவுக்கும் அதிக அக்கறை உண்டு. சமாதானம் என்ற பெயரில் நாட்டின் ஒற்றுமையை ஆபத்துக்குள்ளாக்கும் முயற்சியில் யாரும் ஈடுபடக்கூடாது என்றே நாங்கள் கவலைப்படுகிறோம். எங்களின் இந்த நியாயமான கவலையை இந்தியாவிடம் தெரிவிப்பதற்காகவே நான் இங்கே வந்துள்ளேன் என்றார்.

தான் தெரிவித்த கவலைகளை இந்திய அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் கரிசனையுடன் கேட்டுக் கொண்டதாகவும் தெரிவித்தார். அதே சமயம், சமாதான நடவடிக்கையைத் தொடர இந்தியா விரும்புவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ கூறினார்.

### மக்கள் எவரும்...

திட்டமிடப்பட்டிருந்த இந்த நிகழ்ச்சிகளின்போது, நடனம் மற்றும் இசை நிகழ்ச்சிகள் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தன.

ஆனால், இந்த நிகழ்ச்சிக்கு பொது மக்கள் எவரும் சமுகமளிக்கவில்லை. ஒரு சில சிங்களப் பாடசாலை மாணவர்கள் மட்டுமே சென்றிருந்தனர். இதனையடுத்து நேற்று நடாத்தத் திட்டமிட்டிருந்த நிகழ்வுகள் இறுதி நேரத்தில் இரத்துச் செய்யப்பட்டன.

இதேவேளை - வவுனியா வாரிக்குட்டியூர், 4 ஆம் யுனிற் என்ற கிராமத்தைச் சேர்ந்த சுமார் 60 இற்கு மேற்பட்ட பெண்கள் கறுப்புப் பட்டிகள் அணிந்துகொண்டும், வாய்களை கறுப்புத் துணிகளால் கட்டிக்கொண்டும் வவுனியா அரச செயலகத்தை நோக்கி ஊர்வலமாகச் சென்றனர். அங்கு பிரதமருக்கான மகஜர் ஒன்றை அரச அதிபரிடம் கையளித்தனர்.

### மாவட்ட...

மதிப்பீடு செய்வதற்காக, கடந்த மாதம் மாவட்டங்கள்தோறும் தேவை மதிப்பீட்டுக் குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்தன.

இக்குழுக்களின் தேவை மதிப்பீட்டுப் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இக்குழுக்கள் தமது தேவை மதிப்பீட்டு அறிக்கைகளை, பூரணமாகத் தயாரித்து தம்மிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்று 'சிறான்' அலுவலகம் கோரியுள்ளது. (க)

### கறுப்புக் கொடி...

கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

அரசசார்பற்ற நிறுவனங்கள், கூட்டுறவு அமைப்புக்கள், கல்வி நிலையங்கள் போன்றவற்றிலும் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. (க,லி,ச)

# பள்ளிமுனையில் இந்திய மீனவர் பதினாறு பேர் மடக்கிப் பிடிப்பு!

(கொழும்பு)

மன்னார், பள்ளிமுனை கடற்பரப்பில் சட்டவிரோதமாக அத்துமீறி கடற்தொழிலில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள், உள்ளூர் கடற்தொழிலாளர்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டனர்.

நேற்றையதினம் இலங்கைக் கடற்பரப்பில், இந்திய மீனவர்கள் நான்கு றோலர்களில் கடற்தொழிலில் ஈடுபட்டிருந்தவேளை, வழிமறித்த உள்ளூர் மீனவர்கள் கையும் களவுமாக அவர்களை மடக்கிப்பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

கைதுசெய்யப்பட்ட 16 மீனவர்களும் நேற்றுமாலை மன்னார் மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது, இவர்களை நாளைவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான் எம்.எம்.சபூர்தீன், இவர்கள் கைது செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக இந்தியத் தூதரகத்துக்கு அறிவிக்குமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

## மாதகல் மீனவர் இருவர் காங்கேசனில் கைது!

காங்கேசன்துறை கடற்பரப்பில் கடற்தொழிலில் ஈடுபட்டிருந்த இரண்டு கடற்தொழிலாளரை கடற்படையினர் கைதுசெய்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இந்தச் சம்பவத்தின்போது, மாதகலிலிருந்து கடற்தொழிலுக்காக புறப்பட்டுச்சென்ற இரு மீனவர்கள், கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் இருவரும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு, மல்லாகம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

### பாதுகாப்பு வலயம்...

சமர்ப்பித்தாலும் சமர்ப்பிக்காதுவிட்டாலும் சரி -

இந்த உயர்பாதுகாப்பு வலயம் சட்டவலுவற்றது. எனவே, அரசு உடனடியாக உயர்பாதுகாப்பு வலயத்தை அகற்ற வேண்டும் எனத் தெரிவித்தார். (க,லி)

# மக்கள் பங்கேற்கும் நிகழ்வாக சுதந்திர தினம் மாறவில்லை

## யாழ். அரச அதிபர் பத்மநாதன்

சுதந்திரதின நிகழ்வுகள், இன்னமும் மக்கள் பங்குபற்றும் நிகழ்வாக மாறவில்லை என, யாழ்.கச்சேரியில் நடைபெற்ற 55 ஆவது சுதந்திரதின விழாக் கொண்டாட்டத்தில் அரச அதிபர் செ.பத்மநாதன் தெரிவித்தார்.

நேற்றுக் காலை 8.30 மணிக்கு ஆரம்பமான சுதந்திரதினக் கொண்டாட்டத்தில் முதல் நிகழ்வாக, வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகள் தேசிய கீதத்தை இசைக்க, கச்சேரி ஊழியர்கள் முன்னிலையில் தேசியக் கொடியை அரச அதிபர் பத்மநாதன் ஏற்றிவைத்தார்.

அடுத்து சுதந்திரதின விழாவின் நிகழ்வாக, மரம் நாட்டு நிகழ்வு நடைபெற்றது. அரசஅதிபர், மேலதிக அரசாங்க அதிபர், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர், பிரதம கணக்காளர் ஆகியோர் மரக்கன்றுகளை நாட்டினர்.

தொடர்ந்து அரச அதிபரின் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில், கச்சேரியில் பணிபுரியும் அலுவலர்களும், ஊழியர்களும் கலந்துகொண்டனர்.

அங்கு உரையாற்றிய அரச அதிபர் - சுதந்திரதினக் கொண்டாட்டங்கள் இன்னமும் மக்கள் பங்குபற்றும் நிகழ்வாக மாறவில்லை. எதிர்காலத்தில் மக்கள் பங்குபற்றும் நிகழ்வாக மாறவேண்டும் எனத் தனது உரையில் குறிப்பிட்டார். (ரா)

# நெடுந்தீவு மக்கள்...

✪ நெடுந்தீவில் மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் அச்சுறுத்தலாகவுள்ள ஈ.பி.டி.பி.யினர் முற்றுமுழுதாக வெளியேறவேண்டும். இல்லையேல், பல்வேறு வடிவங்களில் எமது போராட்டம் மீண்டும் நடைபெறும்.

✪ தீவகத்தில் நிலைகொண்டுள்ள கடற்படையினர் உடனடியாக வெளியேற்றப்பட வேண்டும்.

✪ எமது போராட்ட நடவடிக்கையில் ஈடுபட்ட மக்களையோ அல்லது ஒன்றியப் பிரதிநிதிகளையோ கைது செய்யவோ, தண்டிக்கவோ கூடாது. முக்கியமாக எமது பாதுகாப்பிற்கு உத்தரவாதம் தரவேண்டும்.

✪ கடந்த காலங்களில் தீவகத்தில், ஈ.பி.டி.பியினரால் நடாத்தப்பட்ட படுகொலைகள், பாலியல் வல்லுறவுகள், ஊழல்கள், கலாசாரச் சீரழிவுகள் என்பவற்றை விசாரிப்பதற்கு, பக்கச்சார்பற்ற விசாரணைக்குழு ஒன்றை அமைத்து விசாரணைகள் மேற்கொள்ள வேண்டும்.

ஆகிய நான்கு கோரிக்கைகளே முன்வைக்கப்பட்டன. இவற்றை ஏற்றுக்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி, போராட்டத்தில் ஈடுபட்ட மக்களின் பாதுகாப்புத் தொடர்பாக நெடுந்தீவு பொலிஸ் அதிகாரியுடன் பேச்சு நடத்தினார்.

இதன்போது பொலிஸ் அதிகாரி - மக்களுக்குத் தாம் தகுந்த பாதுகாப்பு அளிப்பதாகவும் மக்களைக் கைது செய்யவோ, தண்டிக்கவோ மாட்டோம் எனவும், நெடுந்தீவில் நிலைகொண்டுள்ள ஈ.பி.டி.பியினரைத் தாம் கண்காணிப்பதாகவும் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில், நெடுந்தீவு பிரதேச செயலர், நெடுந்தீவு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர், மக்கள் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (க,லி,113)

பணிநிலை வெற்றிடம் ஆயப்பகுதி
தமிழீழ விடுதலைப் புலிகள்

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயப்பகுதியில் பின்வரும் பணிநிலைகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

மொழி பெயர்ப்பாளர் (ஆண்)

தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மூன்று மொழிகளிலும் தேர்ச்சி உடையவராக இருத்தல் வேண்டும். முன்அனுபவம் கவனத்தில் கொள்ளப்படும்.

சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்

ஆயஇளநிலை அதிகாரி (ஆண்) கணக்காய்வாளர் (ஆண்)

பயிற்சிக்காலச் சம்பளம் 6500/=

தகைமைகள்:
1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் வணிகமானி அல்லது தொழில் நிர்வாகமானிப் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

2. உயர்தேசியக் கணக்கியல் டிப்ளோமா பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

பொருத்தமானவர்கள் 13.02.2003 வியாழக்கிழமை காலை 10.00 மணி தொடக்கம் 1மணி வரை சுயமாகத் தயாரிக்கப்பட்ட வேண்டுகைகள் மற்றும் சான்றிதழ்களுடன் கிளிநொச்சியில் அமைந்துள்ள ஆயப்பகுதி நடுவப்பணியகத்திற்கு சமூகம் தரவும்.

ஆயப்பகுதி,
நடுவப்பணியகம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
கிளிநொச்சி.

(229)

கண்ணீர் அஞ்சலி

எமது நண்பி செல்வி வி.தேவிகா
அவர்களின் பாசமிகு தாயார்
திருமதி வி. அன்னபூரணிதேவி
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினர்க்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தென்மராட்சியைச் சேர்ந்த நண்பிகள்,
(சி-560) நுண்கலைப்பீட 1 ஆம் வருட மாணவர்கள்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 05.02.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.